
ஜூன் 2014 June | இதழ் 281 ISSUE

# தமிழர் தகவல்
# TAMILS' INFORMATION










24 வது ஆண்டில்
24th Year

Growing
with the
Community
ESTD-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
றஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்


*ஆசிரியரிடமிருந்து* **From the Editor**

# இதுவும் ஒரு சோதனையே!

கனடிய நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் அடுத்த வருடம் நடைபெறவுள்ளது. யானை வருவதற்கு முன்னே மணியோசை கேட்பதுபேல இதற்கான முன்னேற்பாடுகளை ஆங்காங்கே காணமுடிகின்றது.

தொகுதிகளுக்கான வேட்பாளர் தெரிவுக்காக தத்தமது கட்சிக்கு உறுப்பினர்களைச் சேர்க்கும் முயற்சியில் எம்மவர் சிலர் வீதிகளிலும் வர்த்தக நிறுவனங்களின் முன்னாலும் படிவங்களோடு நிற்பதைப் பார்க்கப் பரிதாபமாக மட்டுமன்றி வெட்கமாகவுமுள்ளது.

ஸ்காபரோ தொகுதி ஒன்றுக்கு வேட்பாளராகப் போட்டியிட முன்வந்த ஒருவருக்கு இறுதிநேரத் தடங்கல் ஏற்பட்டது தொடர்பாகப் பல கதைகள் உலாவுகின்றன. மின்னஞ்சல்களும் சூடாகப் பறக்கின்றன.

ஒன்ராறியோ மாகாணத்தைப் பொறுத்தளவில் இங்குள்ள சில தொகுதிகளின் வாக்காளர்கள் இவ்வருடத்தில் மூன்று தேர்தல்களுக்கு வாக்களிக்க வேண்டியவர்களாகியுள்ளனர்.

ஒன்ராறியோ மாகாணத்தின் 107 தொகுதிகளுக்கும் இந்த மாதம் பன்னிரண்டாம் திகதி தேர்தல் நடைபெறவுள்ளது. ஒவ்வொரு தொகுதியிலும் குறைந்தது மூன்று கட்சியினர் போட்டியிடுகின்றனர்.

ஒன்ராறியோவின் சகல உள்ளூராட்சிச் சபைகளுக்கும் பாடசாலைச் சபைகளுக்கும் நான்காண்டுக்கு ஒரு தடவை நடைபெறும் தேர்தல் அக்டோபர் 27ல் இடம்பெறவுள்ளது.

இதுதவிர, ரொறன்ரொ நகரிலுள்ள ஸ்காபரோ அஜின்கோர்ட் மற்றும் ட்ரினிற்றி-ஸ்படைனா தொகுதிகளுக்கு நாடாளுமன்றத்துக்கான இடைத்தேர்தல் இந்த மாதம் 30ம் திகதி நடைபெறவுள்ளது. இந்தத் தொகுதிகளின் உறுப்பினர்களாகவிருந்த ஜிம் ஹரியானிஸ் மற்றும் ஒலிவியா சோ ஆகியோர் ரொறன்ரோ நகரசபைத் தேர்தலில் போட்டியிடத் தங்கள் பதவிகளைத் துறந்ததால் இங்கு இடைத்தேர்தல்.

இந்த இரண்டு தொகுதிகளிலும் வாழ்பவர்களே மூன்று தேர்தல்களுக்கு ஐந்து மாத இடைவெளியில் வாக்களிக்க 'அகப்பட்டவர்கள்'.

இது தேர்தல் காலமாதலால் தொலைபேசி அழைப்புகள் - துண்டுப் பிரசுரங்கள் - கதவுகளைத் தட்டுதல் என்று ஒன்ராறியா வீடுகள் அமர்க்களப்படுகின்றன. யார், எந்தத் தேர்தலில் நிற்கிறார் என்று தெரியாது வாக்காளப் பெருமக்கள் பெரும் குழப்பத்தில் தள்ளப்பட்டுள்ளனர்.

ரொறன்ரோ பெரும்பாகத்தில் கணிசமான தமிழர்கள் மாகாண - மாநகர - பாடசாலைச் சபைகளுக்குப் போட்டியிடுவதால், புலம்பெயர்ந்த தமிழர்களுக்கு தேர்தல் திருவிழா போன்று நிகழ்வுகள் காட்சி தருகின்றன.

கட்சிகள் மத்தியில் தனியாட்சியா, கூட்டாட்சியா, சிறுபான்மை ஆட்சியா என்று பட்டிமன்றம் நடைபெற்றுக் கொண்டிருக்க, தமிழர்கள் மத்தியில் அவர் வெல்வாரா, இவர் வெல்வாரா என்று கருத்தரங்கு நடத்தப்படுகிறது.

தமிழரின் அமோக வாக்களிப்பில்லாமல் எந்தத் தமிழரும் வெற்றிபெற முடியாதென்பதை வாக்காளப் பெருமக்கள் நினைவில்கொள்ள வேண்டும்.

ஒற்றை வார்த்தையில் சொல்வதானால், 'இதுவும் ஒரு சோதனையே'!.

திரு எஸ். திருச்செல்வம்


தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

**email**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

**General Manager**
S.T. Singam

**Circulation Manager**
R. R. Rajkumar

**Public Relation**
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகார அடக்கு முறையில் ஈடுபடும் இலங்கையருக்கு தடை விதிக்க கனடா ஆலோசனை!

இலங்கையில் அடக்குமுறை மற்றும் அதிகாரப் பழிவாங்கல், துஷ்பிரயோகம் போன்றவற்றில் ஈடுபடுபவர்களை இலக்காக்கி அவர்கள் கனடா வருவதைத் தடைசெய்வது தொடர்பாகக் கனடிய அரசாங்கம் ஆலோசிக்கவுள்ளதாக கனடிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் பெயர்ட் அறிவித்துள்ளார்.

இலங்கை அரசின் போர்க் குற்றங்கள், பொறுப்புக்கூறலுக்கான அழுத்தம், வளர்ந்து வருகின்ற எதேச்சாதிகாரப் போக்கு போன்றவை காரணமாக எழுகின்ற கனடாவின் நடவடிக்கைகளை மேலும் பலமாக்குவது தொடர்பில் எதிர்க் கட்சிகளின் யோசனைகளை உள்வாங்கி, அவைளுடன் இணைந்து செயற்பட ஹாப்பர் அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் பெயர்ட் கனடிய நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

என். டி. பி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், எதிர்க் கட்சியின் வெளிவிவகார விமர்சகருமான போல் டிவர் எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புலம்பெயர் நாடுகளிலுள்ள 16 தமிழர் அமைப்புகளையும், 424 தனியாட்களையும் இலங்கை அரசு அண்மையில் தடை செய்தது தெரிந்ததே. ஆனால் இந்தத் தடை அறிவிப்பை கனடிய அரசு உடனடியாகவே நிராகரித்து அறிக்கை வெளியிட்டது குறிப்பிடப்பட வேண்டியது.

இதன் தொடர்ச்சியாக, "இலங்கையின் தடையினால் பாதிக்கப்படும் கனடியப் பிரஜைகளைப் பாதுகாப்பதற்கு கனடிய அரசு என்ன நடவடிக்கை எடுக்கிறது? வெளிவிவகாரக்குழு 2009ம் ஆண்டு பரிந்துரைத்தவாறு அடக்குமுறை மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகங்களில் ஈடுபடுவோரை இலக்கு வைத்து அவர்களுக்குத் தடை விதிக்கும் நடவடிக்கைகள் சம்பந்தமாக அமைச்சர் பரிசீலிப்பாரா?" என்ற கேள்வியை போல் டிவர் எம். பி. கடந்த மாதம் நாடாளுமன்றத்தில் எழுப்பியிருந்தார்.

## ஒன்ராறியோ மாகாண தேர்தல் - ஜூன் 12
## மீண்டும் சிறுபான்மையா? கூட்டாட்சியா?
## அடுத்த முதலமைச்சர் பெண்ணா? ஆணா?

## Liberal Leader Kathleen Wynne leaves door open to coaltion with NDP

Liberal Leader Kathleen Wynne is leaving the door open forming a coalition government in order to stay in power.... "I am not ruling out anything. I have demonstarted how I can work in a minority parliament. That's how I would continue to work in a minority parliament if that what the people of Ontario decide" Wynne said.

ஒன்ராறியோ மாகாண அரசாங்கத்துக்கான 41வது தேர்தல் இந்த மாதம் 12ம் திகதி நடைபெறவுள்ளது. அறுதிப் பெரும்பான்மையுடன் ஆட்சியை அமைக்க, மொத்தம் 107 தொகுதிகளில் ஆகக்குறைந்தது 54 இடங்களைக் கைப்பற்ற வேண்டும்.

தேர்தலுக்கு ஒரு வாரத்துக்கு முன்னைய நிலைவரப்படி, லிபரலும் புறொகிரசிவ் கன்சர்வேடிவ் கட்சியும் சமமான ஆதரவில் இருப்பதாக தேர்தல் கருத்துக் கணிப்புகள் தெரிவித்தன. இதனால் மீண்டும் ஒரு சிறுபான்மை அரசே இங்கு வரலாமென்று அரசியல் நோக்கர்களும் மைய ஊடகங்களும் எதிர்வு கூறின.

ஏப்ரல் மாதம் ஒன்ராறியோ மாகாண அரசு கலைக்கப்படும்போது கத்லின் வின் தலைமையில் லிபரல் அரசாங்கம் சிறுபான்மை அரசாகவிருந்தது. அவ்வேளையில் கட்சி நிலைவரம் பின்வருமாறு அமைந்திருந்தது. லிபரல்-48, புறொகிரசிவ் கன்சர்வேடிவ்-37, என் டி. பி - 21. கடந்த இரண்டு வருடங்களில் நடைபெற்ற பல இடைத் தேர்தல்களிலும் என் டி. பி கட்சி வெற்றியீட்டியது குறிப்பானது.

ஒன்ராறியோ முழுவதுக்குமான கடைசித் தேர்தல் 2011ல் நடைபெற்றது. அப்போது லிபரல் 53, புறொகிரசிவ் கன்சர்வேடிவ் 37, என் டி. பி. 17 ஆகிய ஆசனங்களைப் பெற்றன. இந்த மாதம் நடைபெறும் தேர்தலில் பெரும்பான்மைக்கான போதிய ஆசனங்களைப் பெறத் தவறினாலும், எப்படியாவது என் டி. பியின் ஆதரவுடன் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றி முதலமைச்சராக வரவேண்டுமென்பதில் கத்லின் வின் தீவிரமாகவுள்ளார். இதனைச் சில பரப்புரைக் கூட்டங்களிலும் மறைமுகமாகக் கூறியுள்ளார். மொத்தத்தில், ரிம் குடாக்கின் புறொகிரசிவ் கன்சர்வேடிவ் கட்சியை ஆட்சியில் அமரவிடாது தடுப்பதே கத்லின் வின்னின் இலக்கு.

The scenario of what could happen comes in a few ways: The Tim Hudak Tories could form a minority government but the Liberals and New Democrats could team up to form the most number of seats; or if the Liberals form a very slim minority they may still want to be let the NDP into the tent just to keep the Tories at bay.

ஒன்பது வருடங்கள் லிபரல் கட்சியின் தலைவராகவும் முதலமைச்சராகவுமிருந்த டால்ரன் மக்கன்ரி திடீரெனப் பதவி விலகியதால், கடந்த வருடம் பெப்ரவரி மாதம் கத்லின் வின் முதலைச்சராக நேர்ந்தது. டால்ரல் மக்கன்ரி காலத்து அமைச்சரவையில் இவரும் இருந்தவரென்பதால் அவ்வேளயில் இடம்பெற்ற ஊழல், சீர்கேடு ஆகியவைகளுக்கு இவர் பதில் சொல்ல வேண்டியுள்ளது.

தாம் ஆட்சிக்கு வந்தால் உடனடியாக வாகனக் காப்புறுதியைக் குறைக்கப் போவதாகவும், ஆகக்குறைந்த மணித்தியாலப் படியை 12 டாலராக உயர்த்தப் போவதாகவும், அவசர சிகிச்சைப் பிரிவின் காத்திருப்பு நேரத்தைக் குறைக்கப் போவதாகவும் என். டி. பி தலைவர் அன்ட்றியா ஹொவாத் உறுதியளித்து வருகின்றார்.

அரச பணியிலுள்ள ஒரு லட்சம் பேரை பதவி நீக்கப் போவதாகக் கூறும் ரிம் குடாக், அதனால் பலத்த எதிர்ப்பைச் சந்தித்து வரும் அதேசமயம், ஒரு மில்லியன் ஆட்களுக்கு புதிய வேலை வாய்ப்பை ஏற்படுத்தப்போவதாகக் கூறுவதை நம்பும் நிலையில் வாக்காளர் காணப்படவில்லை.



எஸ்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

கனடாவில் அதிகமான விபத்துகள் நிகழும் பாதுகாப்புக் குறைவான முதல் பத்து வீதிகளைக் கனடிய போக்குவரத்துச் சங்கம் (CAA) அடையாளம் கண்டு பகிரங்கப்படுத்தியுள்ளது. நாடு முழுவதுமுள்ள 2000 வீதிகளிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டுள்ள மோசமான பத்தில், ஏழு வீதிகள் ஒன்ராறியோ மாகாணத்தைச் சேர்ந்தவை. இவற்றுள் முதலிடத்தில் டஃப(f)ரின் வீதியுள்ளது.

இந்த வருடத்தின் ஜனவரி முதல் மே வரையான ஆறு மாதங்களில் கனடிய பிரஜாவுரிமையை ஒரு லட்சம் பேர் பெற்றுள்ளனர். கடந்த ஆண்டின் இதே காலப் பகுதியில் கனடிய பிரஜாவுரிமையைப் பெற்றவர்களிலும் பார்க்க இது இரண்டு மடங்கு அதிகமாகும். கனடாவில் நிரந்தரக் குடியுரிமை பெற்றவர்களில் 85 வீதமான-வர்கள் கனடியப் பிரஜாவுரிமையைப் பெறுவது குறிப்பிடத்தக்கது.

மரணத்தை விளைவிக்கக்கூடிய மெலனோமா எனப்படும் தோல் புற்றுநோய் கனடாவில் வேகமாக அதிகரித்து வருகின்றது. 50 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இரு பாலாரும் இந்நோயினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். கனடியர்கள் வெய்யில் காலங்களில் நீண்ட நேரம் சூரிய வெளிச்சத்தில் நிற்பதைத் தவிர்ப்பதும், போதிய பாதுகாப்பு மேற்கொள்வதும் நோயிலிருந்து காப்பாற்ற உதவுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ரொறன்ரோவில் குழாய்கள் வழியாக விநியோகிக்கப்படுகின்ற நீர் குடிப்பதற்கு உகந்ததல்ல என்று ஒரு அறிக்கை தெரிவித்துள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளாக நடத்தப்பட்ட பரிசோதனை இதனைக் கண்டுபிடித்துள்ளது. குழாய்களின் உட்பகுதி நீண்டகாலப் பாவனையிலிருந்தது, ஈயமாகிய நச்சு உலோகம் போன்றவை நீரைப் பாவனைக்கு உதவாததாக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1942ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ம் திகதி - இரண்டாம் மகாயுத்த காலத்தில் பிரிட்டிஷ் கொலம்பியாவிலிருந்து புறப்பட்டபோது காணாமற்போன கனடிய போர் விமானத்தின் சிதைவுகள் எழுபது ஆண்டுகளின் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள போர்ட் றென்புரூ என்னுமிடத்தில் விமானத்தில் பயணித்தவர்களின் உடலின் எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களின் உறவினர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியாக மக்களைக் கவரும் நகரங்களின் வரிசையில் ரொறன்ரோ நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது. சர்வதேச ரீதியான இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ள ஒரேயொரு கனடிய நகரம் ரொறன்ரோ மட்டுமே. சுகாதாரம், பாதுகாப்பு, போக்குவரத்து வசதி, பொருளாதாரம், வர்த்தக முயற்சிகளுக்கான வாய்ப்பு, கல்வி, வாழ்க்கைத் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் இத்தெரிவு இடம்பெறுகிறது.

கடந்த மாதம் 28ம் திகதி ரொறன்ரோ பெரும் பாகத்தில் பொலிசார் கூட்டு வேட்டையொன்றை வெற்றிகரமாக நடத்தினர். இதன்போது 18 வயதுக்கும் 57 வயதுக்குமிடைப்பட்ட ஐம்பது பேர் வரை கைது செய்யப்பட்டனர். அத்துடன் சட்டவிரோதமான ஆயுதங்கள், துப்பாக்கிகள், போதை வஸ்துகள், சுமார் மூன்றரை லட்சம் டாலர் பணம் ஆகியவற்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

கனடாவின் கடற்படைக்குச் சொந்தமான சேவைக் கப்பல்களிலும் நீர்மூழ்கிக் கப்பல்களிலும் சுமார் ஐம்பது வீதமானவை திருத்தப்படாத நிலையில் பழுதடைந்து காணப்படுகின்றன. இதன் காரணமாக இந்த வருடம் கனடிய கடற்படை பாரிய சவால்களை எதிர்நோக்கியுள்ளது. இதனால் உடனடியாக பத்து வரையான புதிய கப்பல்களைக் கொள்முதல் செய்யவேண்டிய தேவையேற்பட்டுள்ளது.

## எம். பி. கோணேஸ் நடத்தும் ITR ஒலிபரப்புச் சேவைக்கு மொன்றியல் FM வானலை அனுமதி கிடைத்துள்ளது!

மொன்றியல் தமிழ் வானொலி நேயர்களுக்கு ஓர் அதிர்ஷ்டம் கிடைத்துள்ளது. சகல வானொலிகள் வாயிலாகவும் வீடுகளிலும் வாகனங்களிலும் கேட்கக்கூடிய FM வானொலிச் சேவையை நடத்தும் அனுமதி, தற்போது அங்கு ஒலிபரப்பாகும் எம். பி. கோணேஸின் ITR வானொலி நிலையத்துக்குக் கிடைத்துள்ளது.

இசையுலகின் ஊடாகத் தமிழர் மத்தியில் பல ஆண்டுகளுக்கு முன்னர் தாயகத்தில் அறிமுகமான கோணேஸ், கனடாவில் ஒலிபரப்பு-ஒளிபரப்புத் துறையில் இருபதாண்டுகளுக்கு முன்னர் பாதம் பதித்து தனிமுத்திரை பொறித்தவர். இன்று கனடாவிலுள்ள பல வானொலி நிலையங்களில் பணியாற்றும் கலைஞர்கள், ஒலிபரப்பாளர்களின் தாய்வீடாக அமைந்தது கோணேஸ் முன்னர் நடத்திய 'ரேடியோ ஏசியா' என்பது வரலாறு.

ITBC என்னும் வானொலி வழியாக ரொறன்ரோ மொன்றியல் ஒட்டாவா வன்கூவர் நேயர்களை 24 மணி நேரமும் ஒன்றிணைத்ததுடன் அதன் அடுத்த கட்டமாக வடஅமெரிக்கா முழுவதும் 24 மணிநேர தொலைக்காட்சியை நடத்திய சாதனையாளர் கோணேஸ். கடந்த நாற்பதாண்டுகளுக்கும் மேலாக கலைத்துறை ஊடாக தமிழ்ப்பணியாற்றி வருகின்ற இவரது ITR என்னும் சர்வதேச தமிழ் வானொலிச்சேவை கடந்த 16 வருடங்களாக இயங்கி வருகின்றது.

சிறந்த குரல் வளமும் அச்சொட்டான தமிழ் உச்சரிப்பும் கொண்ட அறிவுத் தேடல் நிறைந்த மனைவி பத்மினியும், ஒலிபரப்பில் உயிர் மூச்சாக மிளிரும் மகன் பிரதீப்பும் கோணேஸின் மின்னியல் ஊடக வளர்ச்சியிலும் வெற்றியிலும் பிரதான தூண்களாக விளங்குபவர்கள்.

இவர்களின் கூட்டுச் செயற்பாட்டினால் மொன்றியல் தமிழர்களுக்குத் துல்லியமான தமிழ் வானொலிச் சேவையைக் கேட்கும் வாய்ப்பு புதிய FM அலைவரிசை வாயிலாகக் கிடைத்துள்ளது. இதனைச் சரியாகப் பயன்படுத்துவது அங்கு வாழும் தமிழரின் கடமை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதன் சண் - சண் தயாபரன் - கென் கிருபா

## மூன்று வெவ்வேறு தொகுதிகளில் மூன்று தமிழ் வேட்பாளர்கள்

### ஜுன் 6 வரை முற்கூட்டிய வாக்களிப்பு • ஜுன் 12 - தேர்தல் நாள் வாக்களிப்பு

இந்த மாதம் 12ம் திகதி நடைபெறவுள்ள ஒன்ராறியோ மாகாண சபைக்கான தேர்தலில் மூன்று தொகுதிகளில் தமிழர்கள் போட்டியிடுகின்றனர். ஸ்காபரோ றூஜ்றிவர் தொகுதியில் என் டி. பி கட்சியின் சார்பில் மேற்படி கட்சியின் தவிசாளரான நீதன் சண் போட்டியிடுகின்றார். மார்க்கம் யூனியன்வில் தொகுதியில் புறொகிரசிவ் கட்சியின் பிரதிநிதியாக சண் தயாபரன் போட்டியிடுகிறார். ஸ்காபரோ கில்ட்வூட் தொகுதியில் புறொகிரசிவ் கட்சியின் சார்பில் கென் கிருபா போட்டியிடுகிறார்.



Neethan Shan



Shan Thayaparan

நீதன் சண் கடந்த மாகாண சபைத் தேர்தலிலும் இத்தொகுதியில் போட்டியிட்டு சிறிய வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்தவர். கனடாவில் பாடசாலைச் சபையொன்றின் முதலாவது தமிழ் பிரதிநிதியாக (School Trustee) தெரிவான பெருமையைப் பெற்ற இவர் முன்னர் பாடசாலை ஆசிரியராகவும் கடமையாற்றியவர். தற்போது தொற்காசிய சமூக சேவை அமைப்புகளின் கவுன்சிலின் நிறைவேற்று அதிகார இயக்குனராகப் பணியாற்றும் இவர் இளைஞர் பணி மற்றும் பொதுச் சேவைகளுக்காகப் பல விருதுகளைப் பெற்றவர்.

சண் தயாபரன், மற்றும் கென் கிருபா ஆகியோரும் சமூகத்தில் நன்கறியப்பட்ட சமூகத்துறை சார்ந்த சேவையாளர்கள். பல பொது அமைப்புகளில் அங்கம் வகிப்பவர்கள். தற்போது போட்டியிடும் அதே தொகுதிகளில் இதற்கு முன்னர் ஒவ்வொரு தேர்தலில் போட்டியிட்டவர்கள்.

107 உறுப்பினர்களைக் கொண்ட ஒன்ராறியோ மாகாண அரசில் இதுவரை தமிழர் எவரும் உறுப்பினராகத் தெரிவு செய்யப்படவில்லை. கட்சி அடிப்படையிலான வாக்குகளுடன் சமூகம் சார்ந்த பூரண ஒத்துழைப்பு வாக்களிப்பில் கிடைத்தால், தமிழர் பிரதிநிதிகள் இம்முறை தெரிவுசெய்யப்படும் வாய்ப்புண்டு.



---

இந்த மாதம் 12ம் திகதி நடைபெறவுள்ள ஒன்ராறியோ மாகாண அரசுக்கான தேர்தலில் போட்டியிடும் தமிழ் வேட்பாளர்கள் மூவரினதும் தேர்தல் அலுவலக முகவரிகளும், தொடர்புக்கான தொலைபேசி இலக்கங்களும் கீழேயுள்ளது:

**நீதன் சண்** (ஸ்காபரோ - றூஜ்றிவர் தொகுதி - என். டி. பி கட்சி வேட்பாளர்) - 5790 Sheppard Avenue East, Unit: 1, Scarborough. 416 287 9292

**கென் கிருபா** (ஸ்காபரோ - கில்ட்வூட் தொகுதி - புறொகிரசிவ் கன்சர்வேடிவ் கட்சி வேட்பாளர்) - 685 Markham Road, Scarborough - 416 548 7429.

**சண் தயாபரன்** (மார்க்கம் - யூனியன்வில் தொகுதி - புறொகிரசிவ் கன்சர்வேடிவ் கட்சி வேட்பாளர்) 8185 McCowan Road, Markham. 905 946 6625

---

## 'இந்தியாவின் வெற்றி'த் தலைவர் நரேந்திர மோடி



இந்தியாவின் புதிய பிரதமராக பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் நரேந்திர மோடி (61) கடந்த மாதம் 26ம் திகதி பதவியேற்றார். "எனக்கு 300 இடங்களைத் தாருங்கள்; 6 மாதங்களில் இந்தியாவை மாற்றிக் காட்டுகிறேன்" என்று வாக்குக் கேட்ட மோடிக்கு மேலும் 36 ஆசனங்களைக் கொடுத்து அரியாசனம் ஏற்றியுள்ளனர் இந்திய மக்கள்.

"காங்கிரஸ் இல்லாத இந்தியா, மாபெரும் இந்தியா" என்ற கோஷத்துடன் தேர்தலைச் சந்தித்த மோடி, வெற்றி பெற்றதும் முதலில் கூறிய வார்த்தை "இந்தியாவுக்கு வெற்றி' என்பது.

இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் பிறந்து பிரதமர் பதவிக்கு வந்த முதலாவது ஆரசியல்வாதி என்பதுடன், மூன்று தடவை தொடர்ந்து மாநில (குஜராத்) முதல்வராகவிருந்த ஒருவர் பிரதமரானது முதற்தடவை என்னும் பெருமைகள் இவருக்குண்டு. இவரது அமைச்சரவையில் 75 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இடமில்லை. இதனால் அத்வானி 'அவுட்'. 45 அமைச்சர்களில் ஏழு பேர் பெண்கள். ஐவர் முன்னாள் முதலமைச்சர்கள். தமிழ்நாட்டில் வெற்றிபெற்றவர் ஒருவர். எந்தவொரு அமைச்சரும் தங்கள் அமைச்சில் அவர்களின் உறவினர்களுக்குப் பதவி (வேலை) வழங்கக்கூடாது என்பது மோடியில் முதலாவது உத்தரவு. தமது தாயார் மற்றும் சகோதரர்களைக்கூட தமது பதவியேற்புக்கு அழைக்காது ஒரு வித்தியாசத்தைச் செயலில் காட்டியுள்ளார் மோடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனுவல் ஜேசுதாசன் சட்டத்தரணி

# ஒன்ராறியோவில் வாகன ஓட்டிகளும் ஆசனப்பட்டியும்

ஒரு நாட்டின் அரசாங்கமோ, அந்நாட்டின் மாகாண, நகர அரசாங்கங்களோ சட்டங்கள் இயற்றும்பொழுது அச்சட்டங்களை மீறுபவர்களுக்கு எதிரான தண்டனைகள் எவை என்பதையும் அத்தண்டனைகள் எவ்வகையில் அமைய வேண்டும் என்பதையும் அந்தந்தச் சட்டக் கோவைகளில் (Legislative Acts) விசேட பிரிவுகளாகப் புகுத்தியிருக்கும். குறிப்பிட்ட குற்றங்கள் புரிபவர்களுக்கு 'விலக்க முடியாத பொறுப்பை' (Absolute Liability) அல்லது 'கடுமையான பொறுப்பை' (Strict Liability) சுமத்தி, புரிந்த குற்றத்துக்கான தண்டனை என்னவென்று குறித்த சட்டக்கோவையில் கூறப்பட்டுள்ளதோ அத்தண்டனையை (Sentence) நீதிமன்றங்கள் வழங்க வேண்டும்.

ஒன்ராறியோ பெரும்பாக வீதி சட்டக்கோவை (Ontario Highway Traffic Act) பிரிவு 106(2) வாகன ஓட்டுனர் வாகனத்தில் முறையாக பொருத்தப்பட்டிருக்கும் ஆசனப் பட்டியை எப்பொழுதும் (always) அணிந்திருக்க வேண்டுமெனக் கூறுகிறது. இச்சட்டத்தை மீறுபவரின் மேல் விலக்கப்பட முடியாத பொறுப்பையோ (absolute liability) அல்லது கடுமையான பொறுப்பையோ (strict liability) சுமத்தி தண்டனை வழங்க வேண்டுமென்ற சட்ட விளக்கம் கோரி மேன்முறையீடு செய்யப்பட்ட வழக்கொன்றில், ஒன்ராறியோ மாகாணத்தின் அதியுயர் நீதிமன்றம் அண்மையில் தெளிவான தீர்ப்பைக் கூறியுள்ளது.

பேர்லிங்ரன் நகர வீதி ஒன்றில் ஒருவர் வாகனம் ஓட்டிக் கொண்டிருக்கும்பொழுது, தமது பின் ஆசனத்தின் கோப்பை தாங்கியில் (cup holder) வைத்திருந்த சூடான கோப்பி அதனருகில் வைக்கப்பட்டிருந்த மடிக்கணினியின் (Laptop) மீது தெறித்து விழுந்து கொண்டிருந்ததை அவதானித்தார். கிட்டிய வாய்ப்பைப் பயன்படுத்தி 'நிறுத்துக அடையாளம்' (stop sign) ஒன்றில் வாகனத்தை நிறுத்தி, ஆசனப்பட்டியை அகற்றி, பின்பக்க ஆசனத்திலிருந்த கோப்பி கிண்ணத்தைச் சரி செய்தார். அவ்வேளை அதை அவதானித்த பொலிசார், ஓட்டுநர் வாகனம் ஓட்டும்பொழுது ஆசனப்பட்டி அணியவில்லை என்ற குற்றச்சாட்டை அவர்மேல் சுமத்தி அதற்கான தண்டனையையும் கொடுத்தார். இந்தக் குற்றச்சாட்டுக்கு எதிராக ஒன்ராறியோ மாகாண கீழ்நீதிமன்றில் சமாதான நீதிவான் (Justice of the Peace) முன்னிலையில் ஓட்டுநர் வழக்குத் தாக்கல் செய்தார்.

விசாரணையின்போது ஓட்டுநர் சில வினாடிகள் ஆசனப்பட்டியைத் தாம் அகற்றியதற்கான காரணத்தை விளக்க முயன்றபோது, சமாதான நீதிவான் அவரை இடைமறித்து, உமது விளக்கத்தை நான் கேட்க வேண்டிய அவசியமில்லை. ஆசனப்பட்டி அணிந்திருக்க வேண்டும் என்பது விலக்க முடியாத பொறுப்பு. ஆகவே குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருந்தபொழுது நீர் ஆசனப்பட்டி அணிந்திருந்தீரா இல்லையா என்பதுதான் கேள்வி. நீர் ஆசனப்பட்டி அணிந்திருக்கவில்லை என்பதை நான் ஏற்றுக் கொண்டு உமக்கு அதற்கான தண்டனை வழங்குகிறேன் என தீர்ப்புக் கூறினார்.

தமக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து ஓட்டுநர் ஒன்ராறியோ மாகாண சிரேஷ்ட நீதிமன்றில் மேன்முறையீடு செய்தார். மேன்முறையீட்டை விசாரித்த நீதிபதி, கீழ்மன்றின் தீர்ப்பைத் தள்ளுபடி செய்து ஆசனப்பட்டி அணிய வேண்டுமென்பது விலக்கப்பட முடியாத பொறுப்பு அல்ல மாறாக கடுமையான பொறுப்பு என தீர்ப்பளித்தார்.

நீதிபதியின் தீர்ப்பை எதிர்த்து அரச சட்டத்தரணிப் பிரிவு (Crown Counsel) ஒன்ராறியோ மாகாணத்தின் அதியுயர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்தது. மனுவை விசாரணை செய்த உயர் நீதிமன்றம் கீழ்மன்றின் சமாதான நீதிவானின் தீர்ப்பை சிரேஷ்ட நீதிமன்றம் தள்ளுபடி செய்தது சரியான தீர்ப்பு என ஏற்று, அரச தரப்பு மேன்முறையீட்டை நிராகரித்தது. அதற்கான விளக்கத்தை அளிக்கையில்,

• ஆசனப்பட்டி அணிவதற்கான நியாயபூர்வமான முயற்சிகள் எடுத்த பொழுதும் ஆசனப்பட்டி அணிய முடியாமலிருக்கும் சூழ்நிலைகளைக் கற்பனை பண்ணிப் பார்க்க முடியும்.

• ஆசனப்பட்டியை அணிய வேண்டுமென்பதற்காக முறையான முயற்சி (due diligence) எடுத்தார் என்பதை ஓட்டுநர் உறுதிப்படுத்துவது ஆசனப்பட்டி அணியாமையை குற்றச் செயலாக்க முடியாது. ஆகவே ஆசனப்பட்டி அணிய வேண்டுமென்ற சட்டம் 'கடுமையான பொறுப்பை' (strict liability) அன்றி, விலக்க முடியாத பொறுப்பை (absolute liability) அல்ல கருத்தில் கொண்டுள்ளது.

• பொதுமக்களின் பாதுகாப்புக்காக நிறைவேற்றப்படும் சட்டங்களை நிலைநிறுத்துவதற்கு வழக்கு தொடுநர் (prosecutor) வாகன ஓட்டுநர் ஆசனப்பட்டி அணியவில்லை என்பதை நிரூபித்தல் போதுமானது. ஆனால் குற்றம் சாட்டப்பட்டவர் ஆசனப்பட்டி அணிவதற்காக தாம் மேற்கொண்ட முறையான முயற்சியை எதிர்வாதமாக (Defence) எழுப்புவதற்கு அனுமதிக்க வேண்டும்.

உயர் நீதிமன்றின் மேற்கூறப்பட்ட தீர்ப்பு ஓட்டுநர் ஆசனப்பட்டி எப்பொழுதும் அணிய வேண்டுமென்ற சட்டத்தில் எதுவித மாற்றமும் ஏற்படுத்தவில்லை என்பதை அறிந்து கொள்ள வேண்டும். ஆனால், இதுவரை சந்தேகத்திற்கு இடமாகவிருந்த இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும்பொழுது, அதற்கு எதிர்வாதம் உண்டா எனவும் அந்த எதிர்வாதம் ஓட்டுநர் மேற்கொள்ளும் முறையான முயற்சி என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளது.

ஒன்ராறியோ பெரும்பாக வீதிச் சட்டத்தில் பிரிவு 106 (6) எந்த சூழ்நிலைகளில் ஆசனப்பட்டியை ஓட்டுநர் ஒருவர் அணிய வேண்டியதில்லை என்ற விதிவிலக்கைக் கூறுகின்றது. அந்த விதிவிலக்குகள்:

• வாகனத்தை பின்நோக்கி ஓட்டும் பொழுது (vehicle in reverse)
• சட்டப்படி தகுதி பெற்ற மருத்துவர் ஒருவரின் அத்தாட்சிப் பத்திரத்தை பின்வரும் காரணங்களுக்காக வைத்திருப்பவர்
• மருத்துவ காரணத்துக்காக குறிப்பிட்ட காலத்திற்கு ஆசனப்பட்டி அணிய முடியாமலிருப்பது
• ஒருவரின் பருமன் காரணமாக அல்லது உடலமைப்பு காரணமாக ஆசனப்பட்டி அணிய முடியாமலிருப்பது
• 40 கி.மீ வேகத்திற்குக் குறைவாக வாகனத்தைச் செலுத்தி அடிக்கடி தரித்து நிற்க வேண்டிய ஊழியர்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# ஒரு வாரத்தில் இரு நாட்கள்

## இரு நிபுணர்கள்

ஒரே நாளில் இரண்டு சமையல் கலை நிபுணர்களுடன் தொடர்பு ஏற்படுவது அபூர்வத்திலும் அபூர்வம். ஆல்பர்ட்டாவிலிருந்து எனக்கொரு தொலைபேசி அழைப்பு வந்தது. அது வேறொரு தேசம்போல. அங்கே ஒருவரையும் எனக்கு தெரியாது. பேசியவர் தன் பெயரைச் சொல்லிவிட்டு என் பெயரைக் கேட்டார். நான் சொன்னேன். அறக்கட்டளை ஒன்றுக்கு நன்கொடை வழங்கும் விசயமாகப் பேசினார். அவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். ஆல்பர்ட்டாவில் ஒரு ஹொட்டலில் சமையல் கலை நிபுணராக பணியாற்றுகிறார். அதற்கு முன்னர் அமெரிக்காவில் உல்லாசக் கப்பல் ஒன்றில் சமையல் துறையில் பணியாற்றினார். இவருடைய பயிற்சி தாஜ் ஹொட்டலில் நடைபெற்றது. பின்னர் அங்கே வேலைசெய்தபோது இவரிடம் பயிற்சிக்கு வந்த ஒரு பெண்ணையே காதலித்து மணந்தார். தொலைபேசியில் முன்பின் தெரியாத என்னிடம் இவையெல்லாவற்றையும் பகிர்ந்துகொண்டார்.

சமையல் கலை நிபுணர்கள் என்னை இலகுவில் வசியம் செய்துவிடுவார்கள். எனக்கு அவர்களிடம் ஓர் ஈர்ப்பு இருந்தது. ஓர் இசைக்கலைஞர் ஈர்ப்பதுபோல அவர்கள் என்னை ஈர்த்தார்கள். இசைக்கலைஞர் ஸ்வரங்களுடன் விளையாடுவதுபோல சமையல் கலைஞர் கூட்டுப்பொருள்களுடன் விளையாடுகிறார். இருவருடைய கற்பனையும் எல்லையில்லாமல் விரியும் தன்மையானது. நல்ல இசைக்கலைஞர் ஒருவருக்கு ஸ்வரங்களை தாளில் படிக்கும்போதே உள்ளுக்குள் இசை ஓடும். அப்படியே சமையல் கலைஞர் கூட்டுப்பொருள்களை தெரிவு செய்யும்போதே அவருடைய மூளைக்குள் சுவை தெரிந்துவிடும் என்று சொல்வார்கள். எத்தனை மணி நேரம் என்றாலும் ஒரு சமையல் கலைஞருடன் பேசுவதற்கு நான் பிரியமாய்த்தான் இருப்பேன்.

'உங்கள் சமையல் வாழ்க்கையில் நிகழ்ந்த மறக்க முடியாத சம்பவம் என்ன?' என்று கேட்டேன். 'நான் அப்பொழுது தாஜ் ஹொட்டலில் வேலைசெய்தேன். ஒருநாள் பிரபலமான ஒருத்தருக்கு பெரிய விருந்து வைத்தார்கள் ஆனால் யாருக்கான விருந்து என்று எங்களுக்கு சொல்லப்படவே இல்லை. நான் அந்த விருந்துக்கு பிரத்தியேகமான ஓர் அலங்காரம் செய்தேன். உருக்கிய வெண்ணெய்கட்டியில் தாயின் மடியில் பிள்ளை இருப்பது மாதிரி ஒரு சிலை தயாரித்தேன். அது தத்ரூபமாக அமைந்தது. விருந்து முடிந்து எல்லோரும் போய்விட்டார்கள். நான் சமையலறையில் பாத்திரங்களை அதன் அதன் இடத்தில் வைத்து அடுத்தநாள் வேலைக்கு தயார் செய்து கொண்டிருந்தேன். அப்பொழுது வாசலில் நிழல் பட்டது. திரும்பிப் பார்த்தேன். சச்சின் டெண்டுல்கர். என்னைப் பாராட்டுவதற்காக அவர் நேரே வந்துவிட்டார். என்னுடைய மேலதிகாரிகள் என்னைக் கூப்பிட்டு அவரிடம் அறிமுகம் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் டெண்டுல்கர் ஒருவரைப் பாராட்டும்போது அவர் இடத்துக்கு போய் பாராட்டவேண்டும் என்று சொல்லிவிட்டர். இதைப் பின்னர் மற்றவர்கள் சொல்லித் தெரிந்துகொண்டேன். இது நடந்து 17 வருடங்கள் ஆகிவிட்டன. என் வாழ்நாளில் கிடைத்த ஆகப் பெரிய விருது இதுதான்.'

அன்று இரவு இன்னொரு சமையல் கலை நிபுணரைச் சந்தித்தேன். அவருடைய பெயர் ஹொஸே அண்ட்ரே (Jose Andres). இவருடைய பெயரை கூகிளில் தேடினால் இவரைப் பற்றிய முழு விவரமும் வரும். உலகத்து சமையல் கலைஞர்கள் வரிசையில் முதல் வரிசையில் இருப்பார். 'சர்வதேச அதி பிரபலமான 100 பேர்கள்' என்று டைம் பத்திரிகை ஒவ்வொரு வருடமும் ஒரு பட்டியல் வெளியிடும். 2012 ஆண்டு வெளியிட்ட 100 பேர்கள் பட்டியலில் அவர் பெயரும் இருந்தது. அவர் பெயருடன் இருந்த வேறு சில பெயர்கள். பராக் ஒபாமா, ஹிலாரி கிளிண்டன், வார்ரன் பஃவட், சல்மான் கான். இவருடைய சமையல் திறமைக்காக இவர் தெரிவு செய்யப்படவில்லை. இவருடைய ஈகைக் குணம்தான் இவரை பிரபலர்களில் ஒருவராக தெரிவு செய்வதற்கு உதவியது. அன்றைய இரவு இவர் பத்து நிமிடம் பேசினார். என் வாழ்க்கையில் நான் கேட்ட பேச்சுக்களில் மனதில் நிற்கும் பேச்சு இது.

ஹைட்டி மக்கள் புயலடித்து தவித்தபோது இவர் அவர்களுக்கு சூரியக்கதிரில் வேலைசெய்யும் சமையல் அடுப்புகளை வழங்கினார். அகதிகளுக்கும், உணவில்லாதவர்களுக்கும்தான் அவர் மனதில் முதல் இடம் உண்டு. அவர் சொன்னார் 'சிறிய தொகை மக்களுக்கு சமைத்துப்போட்டு அலுத்துவிட்டது. லட்சக் கணக்கானவர்களின் பசியை நான் போக்கவேண்டும். அதற்காக உழைப்பேன்.'

ஒருவரை சச்சின் டெண்டுல்கர் பாராட்டினார். மற்றவரை டைம் பத்திரிகை பாராட்டியது. இருவருமே ஈகையாளர்கள். இருவருக்கும் சக உயிர்களிடம் அன்பு செலுத்துவதற்கு தாராளமான மனம் இருக்கிறது.

## ஒரு வாசகர்

ரொறன்ரோவில் ஓர் அச்சுக்கூடத்துக்கு போனேன். அவர்கள் வேலையை முடிக்காததால் காத்து நின்றேன். இன்னொரு வாடிக்கையாளரும் அங்கே நின்றார். அவருக்கு 60 வயது இருக்கலாம். கையிலே ஒரு கனமான பை வைத்திருந்தார். என்னையே பார்த்தார். பின்னர் என்னை தொடர்ந்து பேசுவதற்கு தயங்குவது தெரிந்தது. எப்படியோ தைரியத்தை வரவழைத்துக்கொண்டு 'நீங்கள் எழுத்தாளரா?' என்றார். நான் ஓம் என்றேன். அவர் 'அ.முத்துலிங்கமா?' என்றார். அதற்கும் ஓம் என்றேன்.

உடனே உணர்ச்சி வசப்பட்டார். அவர் பேசியது ஒன்றுமே புரியவில்லை. அவர் என்னை பல வருடங்களாக சந்திக்க முயன்றதாகவும் சந்தர்ப்பம் அமையவில்லை என்றும் சொன்னார். தொடர்ந்து அவர் படித்த என்னுடைய புத்தகங்களின் பெயர்களைச் சொன்னார். அவை சரியாகவே இருந்தன. அப்பொழுதுகூட நான் அவரைச் சீரியஸாக எடுக்கவில்லை.

'கொஞ்சம் இருங்கள்' என்று சொல்லிவிட்டு குனிந்து அவர் காவிய பையிலே இருந்து ஒரு கட்டுத் தாள்களை வெளியே எடுத்தார். அதன் தலைப்பிலே பென்சிலால் 'அ.முத்துலிங்கம்' என்று எழுதியிருந்தது. இன்னொரு கட்டு எடுத்தார். அதிலும் 'அ.முத்துலிங்கம்' என்று எழுதியிருந்தது. இன்னொரு கட்டு. அதிலும் அப்படியே. என்னுடைய புத்தகங்களைப் படித்து குறிப்பெடுப்பதாகச் சொன்னார். →



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா?

42

மனம் என்பது பரிணாம வளர்ச்சியில் ஒரு கட்டம். அதில் நிறைவுகளும் குறைபாடுகளும் உள்ளன. விஞ்ஞான வளர்ச்சியில் வந்தமை எல்லாமே நிறைவாக இருந்தால் மனதுக்கு வேலை இருக்காது. இதனாலேயே இன்றுள்ள தீவிரவாதம், உலகயுத்தங்கள், பனிப்போர் என்பவற்றைவிட மோசமாக உள்ளது. இதனால்தான் இன்றைய மனிதன் சராசரியான வழியில் செல்வானா? என்ற கவலை எல்லோரையும் வாட்டி எடுக்கிறது. புத்தர், இயேசு, கன்பிகூசியல், ஜெகத்குரு போன்றவர்கள் பல்வேறு போதனைகளை செய்தாலும் நிலமை மோசமடையவே செய்கிறது.

மனம் என்பது சாதாரண விடயம் அல்ல, அது மாபெரும் புதிர். விஞ்ஞானம், மனதை புரிந்து கொள்ள முயற்சி செய்தவண்ணம் உள்ளது. சிலர் மனமுடைந்து உட்கார்ந்து விடுவார்கள். மனதை நன்றாகச் சிந்திக்கப் பழக்குவதே ஒரே வழியாகும். மனம், யாருக்கு எந்த காலத்திலும் எந்த உத்தரவாதமும் கொடுத்ததில்லை. மனம் என்பது, எந்த நிலையிலும் மாறலாம். சாதாரண நிலையிலும் இருக்கலாம், பரவச நிலையையும் அடையலாம்.

முயற்சியே மனதினை வழிப்படுத்தும். கண்ணதாசன், நினைத்த மட்டில் பாடல்களை எழுதிக் குவித்தார். ஷேக்ஸ்பியர், 56 வயதில் 37 நாடகங்கள் எழுதினார். கடின உழைப்பு பழக்கமாகிவிட்டால் அதுவே சுலபமாகிவிடும்.

ஆனந்தம் என்பது யாருக்கும் எளிதாக கிடைப்பதில்லை. அதற்கு காரணங்கள் உண்டு. இயற்கையான நிலையில் மனம் பலவீனமாக உள்ளது. அதனை சரி செய்தால்தான் சக்தி பிறக்கிறது. எனினும் பலருக்கு மனம் சரிவருவதில்லை. அதனால்தான் பலர், ஞானிகளை தேடி ஓடுகிறார்கள். புத்தர், துன்பத்தை அறவே ஒழிக்க முடியும் என்றார். இருப்பினும், அவர் சொல்லி பல ஆயிரம் ஆண்டுகள் ஆன பின்பும் துன்பம் தொடர்கிறது.

மனம் ஒருநிலைப்படுவதே தியானம். பொறுமையாக செய்வதாலேயே மனம் அமைதியடைகிறது. மனம் அமைதியாவதற்கு பலர் மருந்துகளையே நாடுகின்றனர். ஆனால் அவை பல்வேறு பின்விளைவுகளையே ஏற்படுத்தும். மனப்பயிற்சி என்பது சிறுவயது முதலே ஏற்படுத்த வேண்டும். இதில் ஓரிடத்தில் தவறினாலும் மனம் சிக்கலை தந்து கொண்டேயிருக்கும்.

சிலரிடம் நல்ல மனப்பக்குவம் இருக்கும். மனப்பக்குவம் என்பது அழகான, பொருளுள்ள தமிழ்ச் சொல்லாகும். மனப்பக்குவம் உள்ளவர்களே மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். எதிர்மறையாக மனதினை தவிர்க்காமல் உயிரை காப்பாற்ற நல்ல மனதோடு வாழ்வதுதான் மனிதனின் கௌரவம். இந்த உண்மை உணரப்பட்டால் மனம் வைரமாக ஜொலிக்கும். மனத்தெம்பு என்பதும் முக்கியமானதொரு சொல்லாட்சி. மருந்துகளை கொடுத்தாலும் மனத்தெம்பு முக்கியமாகும். அடிக்கடி பல நோயாளிகளை நாம் சந்திக்கும் போதெல்லாம் மனத்தெம்பு கூறியே விடைபெறுவோம்.

"மனம் என்பது இருந்தால் பெரிய கஷ்டங்களை தாங்கிக் கொள்ள முடியும்" என்கிறார் Frane Alexander என்ற அறிஞர். கஷ்டங்கள் அதிகரிக்கும்போது மனஉறுதி, மனவைராக்கியம் ஏற்படுகிறது. ஒரு சவாலை நோக்கி செல்லும்போதே மனம் தயாராக இருக்கும். மனவிரக்திகூட மனதினை புரட்டிப் போட்டு விடுகிறது. இந்த இடத்தில் தீவிரமான முயற்சியும் தெளிவும் தேவைப்படுகிறது. அமைதிதான் மனதின் பலன். அதனை அங்கலாய்க்க விடக்கூடாது.

'மனதின் தூய்மையை, பல மாசுகளும் துன்பங்களும் மறைக்கின்றன'

மீண்டும் தொடருவேன்....●

## இரு நாட்கள்...

என்னை ஆச்சரியம் மூடிவிட்டதால் அதனிலும் கூட ஆச்சரியப்படமுடியாமல் திகைத்துப்போய் நின்றேன்.
நான் வீடு திரும்பும்போது நினைத்தேன். எதற்காக ஒருத்தர் ஓர் எழுத்தாளரைப்பற்றி கட்டுரை குறிப்புகள் எழுதி அவற்றைக் கட்டுக் கட்டாக கட்டி பிளாஸ்டிக் பையில் காவிக்கொண்டு தினமும் வெளியே போகவேண்டும். அந்த எழுத்தாளரை தற்செயலாக சந்திக்கலாம் என்ற நம்பிக்கையிலா? அந்தக் கேள்வியை நான் கேட்க மறந்துவிட்டேன். ஏனென்றால் அந்த வாசகர் அளவுக்கு நானும் உணர்ச்சி வசப்பட்டிருந்தேன்.●

## இங்கிலாந்து லண்டன் மாநகர தேர்தல்களில் 10 தமிழர்கள் வெற்றி!

இங்கிலாந்தின் லண்டனிலுள்ள மாநகர-சபைகளுக்கான தேர்தல் கடந்த மாதம் நடைபெற்றது. இதில் மூன்று பிரதான கட்சிகளிலிருந்தும் மொத்தமாக பத்துத் தமிழர்கள் கவுன்சிலர்களாகத் தெரிவாகியுள்ளனர். இவர்களுள் ஒன்பது பேர் ஈழத்தமிழர். ஒருவர் தமிழகத்தைச் சேர்ந்தவர். எண்மர் ஆண்கள், இருவர் பெண்கள். வெற்றி பெற்ற பத்துப் பேரில் ஆறு பேர் தொழிற்கட்சியைச் சேர்ந்தவர்கள். மூவர் லிபரல் ஜனநாகக் கட்சியையும், ஒருவர் கன்சரவேடிவ் கட்சியையும் சேர்ந்தவர்கள்.

தெரிவானவர்கள் பெயரும் அவர்கள் தெரிவான மாநகரசபையின் பெயரும் வருமாறு:

மயில்வாகனம் யோகநாதன் - கிங்ஸ்ரன்
ஆலிசா பாக்கியதேவி - சவுத் வார்க்
கஜன் வாலுப்பிள்ளை - கிங்ஸ்ரன்
மைக் செல்வா - குறொய்ரன்
தவத்துரை ஜெயரஞ்சன் - றெட்பிரிட்ஜ்
கண நகீரதன் - குவின்பரி
வைத்தீஸ்வரன் தயாளன் - கிங்ஸ்ரன்
போல் சத்தியநேசன் - நியுஹாம்
சுரேஷ் கிருஷ்ணா - ஹரோ
சசி சுரேஷ் - ஹரோ

ஹரே மாநகரசபைக்கு சுரேஷ் - சசி ஆகியோர் தம்பதிகளாக மீண்டும் தெரிவாகியுள்ளனர். இது தவிர மீண்டும் கவுன்ஸிலர்களாகத் தெரிவானவர்களில் சிலர் தங்கள் கவுன்ஸிலின் மேயராகவும், உதவி மேயராகவும் முன்னர் பதவி வகித்தவர்கள். வெற்றி பெற்றவர்களில் அதிகமானவர்கள் தமீழிழ தேசியப் போராட்டத்தில் விடுதலை உணர்வுடன் பல காலம் பணியாற்றிவருபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# அலைபேசி பாவனையில் காணப்படும் இடைவெளி The Digital Gap

2012ம் ஆண்டில் BYOD – அதாவது Bring Your Own Devices – உங்கள் கற்றல் கருவிகளை நீங்களே வகுப்பு-களுக்குக் கொண்டு வாருங்கள் என்ற கொள்கையை பீல் கல்விச் சபை அமுல்படுத்தியது. அப்பொழுது வருமானம் குறைந்த குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகளால் தமது சொந்தக் கருவிகளை வகுப்புக்குக் கொண்டு வர முடியாமல் போகலாம். அதனால் மாணவர்கள் மத்தியில் கற்றலில் ஒரு சமமின்மை ஏற்படலாம் எனக் கல்விமான்கள் எதிர்பார்த்தனர். இதனைக் கணினி இடைவெளி – App Gap என அழைத்தனர். இவர்கள் எதிர்பார்த்த அந்த நிலை இன்று உருவாகி உள்ளது. ஆகவே கல்விச் சபைகள் இந்தச் சமமின்மையை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்ற முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

ஒன்ராறியோவிலுள்ள பாடசாலைகளில் 60 வீதம் பாடசாலைகளில் மாணவர்கள் தமது சொந்த அலைபேசிச் சாதனங்களையே வகுப்புக்குக் கொண்டு வருகிறார்கள். 96 வீதம் பாடசாலைகளில் மாணவர்கள் பாடசாலைக் கணினிகளைப் பாவிக்கும் வசதிகள் உண்டு. ஆயினும் 58 வீதம் மாணவர்கள் தங்கள் சொந்தக் கருவிகளிலேயே கற்க விரும்புகின்ற-னர். இது சம்பந்தமாக People for Education 1349 பாடசாலை ஆய்வின்படி சொந்தக் கருவிகளைக் கொண்டுவர முடியாத மாணவர் கள் அலைபேசி கருவிகளை வாங்குவதற்கோ, பாவிப்பதற்கோ வேண்டிய தொழில்நுட்பத்தை சில கணினி வர்த்தக ஸ்தாபனங்கள் வழங்குவதற்கான திட்டங்களை இன்று பல கல்விச் சபைகள் மேற்கொண்டுள்ளன எனத் தெரிய வந்துள்ளது. இது மிகவும் வரவேற்கப்-பட வேண்டிய ஒரு மாற்றமாகும்.

முதன்முதலாக BYOD என்ற கொள்கையை அமுல்படுத்திய பீல் கல்விச்சபை Dell என்ற ஸ்தாபனத்தோடு செய்த உடன்படிக்கையின்படி 55 டாலர் Tablets வழங்கி வருவாய் குறைந்த குடும்பப் பிள்ளைகளுக்கு உதவியது. ஆனால் இப்பொழுது கல்விச் சபைகள் பல Websites உடன் தொடர்பு கொண்டு மலிவான விலையில் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதோடு மாத்திரமல்லாது வட்டிவீதமற்ற இரவல் வாங்கும் திட்டங்களையும் ஏற்படுத்தியுள்ளனர்.

Brien Woodlands – Director of Comunications and community Relations சமமின்மையை குறைப்பதோடு மாத்திரமல் - லாது மலிவான Internet வசதிகளையும் Dell Company உடன் இணைந்து தங்கள் கல்விச் சபையைச் சார்ந்த 153,000 மாணவர்களுக்கு வழங்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகக் கூறுகிறார். Kelly Gallaghen Makay People for Education Research Director எல்லா மாணவர்களுக்கும் கற்றலில் சமவாய்ப்புகள் வழங்கப்படுதல் முக்கியம் என (Fair Chance to learn) வலியுறுத்தியுள்ளார். இன்று ipad, Tablets என்பன கற்றலுக்கு கட்டாயம் தேவைப்படும் கருவிகளாக மாறி வருகிறன. இதனால் Los Angeles Unified School District – ஒரு மில்லியன் டாலரை ஒவ்வொரு மாணவனுக்கும் Ipad வழங்குவதற்காகச் செலவழித்துள்ளது.

இச் சாதனங்கள் கற்றலுக்கு எவ்வளவு அத்தியாவசியமோ அவ்வளவு தூரத்துக்கு வகுப்புகளில் இடைஞ்சல்களையும் ஏற்படுத்தப் போகின்றன என்பது ஒரு மறுக்க முடியாத உண்மையாகும். மாணவர்கள் பெரும் வேகமாக வளரும் சிந்தனைத் திறன் உடையவர்கள். (Impulse Control and Developing Adolescent Brain). அத்துடன் நினைத்ததை உடனேயே செய்து முடிக்க வேண்டும் என்ற மனநிலை உடையவர்கள். ஆகவே ஆசிரியர்கள் கற்பிக்கும்பொழுது பாடத்திற்குச் சம்பந்தமில்லாத வேறு பல கணினி மையங்களுக்குச் சென்று – (Games, Facebook) உசாவும் (Browse) பழக்கத்தை மேற்கொள்ளத்தான் போகிறார்கள். இதனால் வகுப்புகளில் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்படத்தான் போகிறது. மாணவர்கள் வேறு மையங்களுக்குச் செல்லாத வகையில் பல தடைகளை பாடசாலைகள் மேற்கொண்டாலும் மாணவர்கள் அவற்றை துஷ்பிரயோகம் (Hack) செய்யும் ஆற்றல் உடையவர்கள். இதனை Los Angeles பாடசாலைகளில் அனுபவமூலமாக கண்டுள்ளனர். ஆயினும் கற்றலில் ஈடுபாடும், ஆர்வமும் உள்ள பிள்ளைகள் தமது கற்றலையே இலக்கு வைத்து தொழிற்படுவார்கள். காலப்போக்கில் ஏனைய மாணவர்களும் அவ்வாறு செயல்படக்கூடும். எந்த ஒரு மாற்றமும் ஆரம்பத்தில் கடினமாகத்தான் இருக்கும்.

இன்றைய மாணவர்கள் தமது பொழுதில் பெரும்பகுதியை ஏதோ ஒரு திரை முன்பாகத்தான் (Screen) செலவழிக்கிறார்கள். அது கணினியாக இருக்கலாம், அல்லது தொலைக்காட்சியாக இருக்கலாம், அன்றேல் ஏதோ ஒரு அலைபேசிச் சாதனம் முன்பாக இருக்கலாம். இவ்வாறு இருக்கும் பொழுது வகுப்பிலும் இவை தேவைதானா என்ற கேள்வி எழுகிறது. Stanford University செய்த ஒரு ஆய்வில் 75 வீதம் மாணவர்கள் ஐபோன் உடன்தான் நித்திரை கொள்கிறார்கள். 30 வீதம் மாணவர்கள் குளியல் அறையில்கூட தமது ஐபோனை கொண்டு செல்கிறார்கள். ஆகவே வகுப்புகளில் இவற்றைப் பாவிப்பதால் இவர்கள் பெரிதா-கப் பாதிக்கப்படப் போவதில்லை. ஆனாலும் இச் சாதனங்கள் மாணவர்களின் மனப்பாங்குகளில் பல தீமைகளை ஏற்படுத்துகின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். மாணவர்கள் உடனுக்குடன் தரவுகளைப் பெறுவதால் சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலை இழக்கிறார்கள். பிறருக்காக இரங்கும் குணமும் இவர்கள் மத்தியில் குறைந்து கொண்டு போகிறது. அதனால்தான் பலரையும் அலைபேசிச் சாதனங்கள் மூலம் துன்புறுத்தி தன்னிறைவு பெறுகிறார்கள் (Cyber Bullying). ஒரு விடயத்தில் சொற்ப நேரமே கவனம் செலுத்துகிறார்கள். (Attention Span). Microsoft & Google மேற்கொண்ட ஒரு ஆய்வில் ஒரு மாணவன் தான் தேடும் விடயம் ஒரு பக்கத்தில் கிடைக்காவிட்டால் உடனேயே அதாவது 250 மில்லி - செக்கன்களில் வேறொரு பக்கத்து தாவுகிறார். ஒரு புதினப் பத்திரிகையை வாசிப்போர் சராசரியாக 25 நிமிடங்கள் அதற்காகச் செலவழிக்கிறார்கள். ஆனால் on-line வாசிப்போர் சராசரியாக 70 செகண்டுகளையே இதற்காகச் செலவழிக்கிறார்கள்.

மேற்கூறிய குறைபாடுகள் இருந்தாலும் இவற்றை வகுப்புகளில் பாவிக்க அனுமதிக்க வேண்டியுள்ளது. ஏனெனில் பாடசாலைக் கல்வி என்பது எதிர்காலத்தில் தொழில் பார்ப்பதற்கு வழியமைக்க வேண்டும். இன்றைய தொழிற்சந்தையில் அலைபேசிச் சாதனங்களை லாவகமாக கையாளத் தெரிந்திருக்க வேண்டும். ஆகவே இவை வகுப்புகளில் அனுமதிக்கப்பட வேண்டும். இவற்றை மரியாதையோடு (Respectfully) பாவிப்பது மாணவர் கடமையாகும்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் பத்தாம் பக்கம்

# கீரிமலையினிலே..

நீண்ட நெடுங்காலத்தின் பின் கீரிமலை சென்றிருந்தேன்.

கீரிமலையினிலே என்றதும் முதலில் நினைவில் வந்தவர் கவிநாயகர் கந்தவனம் அவர்கள்.

1969ம் ஆண்டு கீரிமலையினிலே என்ற குறுங்காவியத்தைப் படைத்து நலந்தரும் கேணியருகினிலே வேந்தனைப் போல் வீற்றிருந்து இலக்கிய - இலட்சிய சமுதாயம் ஒன்றை அமைத்துக்காட்டிய அவர் நினைவுகளின் நீரோடையில் குளிர்மையூட்டினார்.

கீரிமலையின் செக்கச் சிவந்த வானத்தை அவர் பாயிற் பனங்களி என ஓரிடத்தில் குறிப்பிட்டதும், வெண்மையும் செம்மையும் கலந்த மேகத்தை நுாணாவில் வெண்மண்ணையும் குரும்பசிட்டியின் செம்மண்ணையும் கலந்து துாவியதோ கொணர்ந்து என்று வர்ணித்ததும், பிறிதோரிடத்தில் நீலப்பட்டாடையிலே பழுத்த பலாலித் தக்காளியைச் சாலப் பிசைந்தது போல என உவமைப்படுத்தியதும் இதயத்தில் இனம்புரியாத மகிழ்ச்சியைப் பிரவகித்தது.

ஈழமக்களின் சமய வரலாற்றுக்கும் கலாசாரத்திற்கும் சாட்சியாக முன்னொரு காலத்தில் திகழ்ந்தது கீரிமலை. சுதாமா என்ற முனிவரின் தவத்திற்கு மேரு மலையில் இடையூறு செய்த யமத்கினி என்ற வேடன் சாபவிமோசனம் பெற்று கீரிமுகம் நீங்கி நகுல முனிவரானது கீரிமலையில் என்பது ஆதி ஸ்தல வரலாறு. தெற்கிலிருந்து நிலத்தின் கீழாகச் சுரந்து வரும் பாதாள கங்கை எனும் ஊற்றும், கடல் நீரும் சங்கமமாகும் இந்தப் புண்ணிய தீர்த்தம் கண்டகி தீர்த்தம், சங்கம தீர்த்தம், நகுல தீர்த்தம், என்ற சிறப்புடன் குகைமலை சிவலிங்கம் கோவில் அருகே உள்ளது.

நகுலேஸ்வரம் (கீரிமலை) கேதீஸ்வரம் (மன்னார்) கோணேஸ்வரம் (திருமலை) முன்னேஸ்வரம் (சிலாபம்) தொண்டீஸ்வரம் (மாத்தறை) என இலங்கையில் மிகவும் தொன்மையான பிரசித்திபெற்ற பிரதம சிவாலயங்கள் ஐந்து. இலங்கையின் வட மாகாணத்தில் புராதன மகிமை பெற்ற விஷ்ணு கோவில்கள் நான்கு. வடக்கில் கிருஷ்ணர் (கீரிமலை) தெற்கில் பெருமாள் (யாழ்ப்பாணம்) மேற்கில் வரதராஜர் (பொன்னாலை) கிழக்கில் ஆழ்வார் (வல்லிபுரம்). (அதி தெற்கிலிருந்த தொண்டீஸ்வரம் ஒல்லாந்தாரால் சிதைவுபட மிக வடக்கிலிருந்த ஸ்ரீகிருஷ்ணர் பாதுகாப்பு வலயத்தில்).

கீரிமலையில் சுமார் முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்பாக 'எல்லோருக்கும் தெரிய' ஒன்பது கோவில்கள் அருள் பாலித்தன. இன்று எத்தனை ஆலயங்களும் மடங்களும் அங்குள என்ற கேள்வியால் - எதிர் காலத்தவர்களுக்கு பெயரளவிலேனும் ஓர் ஆவணம் அவசியம் எனத் தோன்றியது.

ஈழத்தின் முத்தித்தலங்கள் என தமிழரால் வணங்கப்பெற்ற கீரிமலை சிவன் கோவில் எனும் நகுலேஸ்வரமும் ஸ்ரீ கிருஷ்ணர் கோவிலும் சிவ விஷ்ணு ஆராதனைகளை பக்தர்களின் இதயங்களில் அர்ச்சித்ததில் பல நூற்றாண்டுகளாக கீரிமலையில் முன்னிலை வகித்தன.

கீரிமலை சிவன் ஆலயம் இன்று நித்திய நைமித்திய பூஜைகளுடன் திருவிழாவும் காண்கின்றது. ராஜ கோபுரம் உயர்கின்றது.

கீரிமலைக் கேணியின் தெற்குப் பக்கமாக கேணிக்கரைப் பிள்ளையார் வீற்றிருக்கின்றார். மாவை ஆதீனத்தின் நிர்வாகத்தில் உள்ள காசிவிஸ்வநாதர் ஆலயம் கேணி வீதிக்கும் சேந்தான்குளம் வீதிக்கும் இடையே அமைந்துள்ளது. மூலவரான சிவலிங்கத்தை காசியிலிருந்து கொண்டுவந்து பிரதிஷ்டை செய்துள்ளனர். புனருத்தாரணப் பணிகள் வெளியே நின்று வழிபடவைக்கின்றன.
மகோற்சவம் கண்ட மாரி அம்மன் கோவில் கடற்கரைப் பக்கமாக சந்திக்கு அண்மித்தும், ஸ்ரீ கிருஷ்ணர் கோவில் கீரிமலை ஏற்றத்திலும், ஈழத்தின் திருச்செந்தூர் எனப் போற்றப்பட்ட கதிரையாண்டவர் கோவில் ஸ்ரீ கிருஷ்ணர் கோவிலுக்கு அப்பால் இறக்கத்தில் கடற்கரை ஓரமாகவும், ஏற்றத்தின் வடக்கே மலைச்சாரலில் உள்ள குகையில் நன்னீர் ஊற்றுடன் குகைமலை சிவலிங்கம் கோவில் தினமும் ஒரு பூ பூக்கும் ஒரு பன்னீர் மரத்துடனும், அதற்கு அண்மித்து ஞானிகள் பலர் நிஷ்டையில் அமர்ந்த சடையம்மா சமாதிக் கோவிலும் குழந்தைவேல் சமாதிக் கோவிலும் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யாத நிலையிலும், கீரிமலை காங்கேசன்துறை வீதியில் அமைந்து தற்பொழுது தடை-செய்யப்பட்ட பகுதிக்குள் அடங்கி பக்தர்களை பரிதவிக்க வைக்கின்றன.

சங்கர சுப்பையர் சமாதி, குமார சுவாமி குருவின் சமாதி, வீரசைவர் சமாதி போன்ற ஏழு சமாதிகளுக்கு கடலோரத்தில் கிரமமாக சூடம் ஏற்றி வழிபட்ட மரபும் சிலரிடம் இருந்தது.ஆனால் அவை சிறு கோவில்கள் அல்ல என்ற கருத்தும் நிலவியது.

1807ல் கட்டப்பட்ட (மானிப்பாய் கதிரவேற்) சிறாப்பர் மடம், (சங்குவேலி) வைத்திலிங்க மடம், (தொல்புரம்) கிருஷ்ணபிள்ளை மடம், (சண்டிலிப்பாய்) செகராஜசிங்க மடம் போன்றவை தங்கவும், இளைப்பாறவும், சிவசிந்தனையில் மூழ்கவும், நற்சிந்தனைகளில் ஈடுபடவும் பெரும் பணி புரிந்தன என்பதை குறித்து வைப்பதும் எதிர்காலத்தின் தேவையாகும். இன்று அவை அனைத்தும் நிர்மூலமாக்கப்-பட்டிருப்பினும் புலம்பெயர் நாடுகளில் வசிக்கும் அவர்களின் வாரிசுகளால் 'அடுக்ககங்களாக' ஒவ்வொரு மடமும் மேலெழும்பலாம் என்ற அபிப்பிராயமும் பரவலாக உண்டு. கீரிமலை சிவன் தீர்த்த மண்டபம், கேணிக்கரை மண்டபம், அந்தியேட்டி மடம் என்பன யுத்த காலத்தில் சிதிலமடையவில்லை.

தமிழ் தெரியாத ஏராளமானவர்களால் தற்பொழுது கேணி நிரம்பி வழிகின்றது. தண்ணியில் அன்றாடம் அங்கு மிதப்பவர் பலர். கீரிமுகம் மாறியது அன்று. கோரமுகம் மாறுவது என்று கரையில் கண்டவர்கள் அங்கலாய்கின்றார்கள்.

கடலுக்குள் முருகைக் கற்கள் கூர்மை அடைந்து கால்களை அரிக்கின்றன. கரையில் புதர்களுக்குள் இரண்டு கால் விலங்குகள் அரிப்பெடுத்து புரள்கின்றன.

கரையொதுங்காத கண்டெடுக்கப்படாத கண்ணி வெடிகள் கவனம் என்ற பலகை அனாதரவாக அலைகளுக்குள் கிடந்து பிதிர் கடன் செய்ய கடலுக்குள் இறங்குவோருக்கே பிதிர் கடன் செய்ய நேரிடலாம் என மறைமுகமாக எச்சரிக்கின்றது.

கீரிமலை - காங்கேசன்துறை வீதி பாவனைக்குத் தடை செய்யப்பட்டுள்ளது. அதிஉயர் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கும் பலகையில் 'கொஞ்சம் படித்தவர்கள் கிராமத்தை விட்டு வெளியேறிவிட்டார்கள். நிறையப் படித்தவர்கள் நாட்டைவிட்டே வெளியேறிவிட்டார்கள்." என யாரோ கரித்துண்டால் எழுதியுள்ளார்கள்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னையா விவேகானந்தன்



# வதைக்காதே நீ யாரெனக் கேட்டு... 15

விசித்திரங்கள் நிறைந்த வாழ்வுச் சுழற்சிகளைக் கொண்ட புலங்களில் இடையறாது ஓடிக்கொண்டிருக்கும் இயந்திர வாழ்வின் பற்சில்லுகளாய் உருமாறிக் கொண்டனர் எம்மவர். எண்ணி மகிழ்வதற்காகச் சின்ன சின்ன இன்பங்களைக் கூட அவர்களால் சேகரிக்க முடியவில்லை. அவ்வாறே நினைத்து மகிழ ஏதேனும் கிடைத்து விட்டால் அதை மென்று விழுங்கும் பெருந் துயரங்களே எங்கும் சூழ்ந்து கிடந்தன.

வாழத்தலைப்பட்ட இடங்களில் சுய அடையாளங்களை நிலைநிறுத்துவது என்பது எம் முன்னோருக்குப் பெரும் அறைகூவலாக இருந்தது. நம்மவரை மனிதர் என்று குறிப்பதை விடவும் அகதி என்று அழைப்பதிலேயே ஆர்வம் காட்டினர் வெளிநாட்டவர்.

மனிதனெனச் சொல்லிவிடலாம்தான்
ரொம்பவும் சுலபந்தான்
ஆனால்
புருவ உயர்வின் நெற்றிச் சுருக்கத்திற்குள்
சிறுக்கும் விழியின் நெருக்கத்திற்குள்
தொக்கி நிற்கின்றதே நிறம்...

இனியும் என்ன சொல்வேன்
இறுதிச் சொல்லும் எனக்கில்லை எனும்போது...
அர்த்தங்கள் மாறிப்போன சொற்களும்
நம்பிக்கை தராத போது
ஆதலால் தயைசெய்து
என்னை நெருக்காதே வதைக்காதே
நீ யாரெனச் சொல் எனக் கேட்டு.... (கனவின் மீதி: பக் 42)

கி. பி அரவிந்தனின் இக்கவிதை அகதி என்ற அடையாளச் சிக்கலுக்குள் இருந்து வெடித்து வெளிக்கிளம்ப முயல்கின்ற மனநிலையை வெளிப்படுத்துகின்றது.

தனித்துவமான இன அடையாளங்களைப் பாதுகாக்கும் இலக்கோடு நடைபெற்றுக்கொண்டிருந்த தாய்நாட்டை மீட்டெடுக்கும் போராட்டச் சூழலுக்குள்ளிருந்து வந்தோருக்கு சுயமிழந்த அகதி அடையாளம் குறிப்பிடத்தக்களவு மனவுளைச்சலை ஏற்படுத்தியது. நிறவெறி உணர்வோடு எதிர்ப்பட்டவர்கள் மீது தாக்குதல் நடத்துமளவிற்கு உணர்வுகள் கொதிப்பேறியிருந்தன. அதேவேளை இவ்வாறான முகமழிப்புகளைப் புறந்தள்ளி விட்டு இயந்திரங்களோடு இரண்டறக் கலந்தவர்களும் இருந்தனர்.

வ.ஐ.ச. ஜெயபாலனின் ஓர் அகதியின் பாடல் என்ற கவிதையில் காணப்படும் சில வரிகளில் ஓர் அகதியின் அடுத்த தலைமுறை பற்றிய ஏக்கம் வெளிப்படுகின்றது.

பாட்டனார் பண்படுத்தி
பழமரங்கள் நாட்டி வைத்த
தோப்பை அழியவிட்டு
தொலைதேசம் வந்தவன் நான்.
என்னுடைய பேரனுக்காய்
எவன் வைப்பான்
பழத்தோட்டம்?

தாயகத்தில் எமது உரிமைகள் மறுக்கப்பட்டாலும் தலைமுறைத் தொடர்ச்சிகள் எல்லாக் குடும்பங்களுக்கும் இருந்தன. பாட்டன் பேரன் உறவுமுறைகள் சொத்துகள் வழியாகவும் நிலைநிறுத்தப்பட்டன. ஆனால் அகதியென அறியப்பட்ட இந்த வாழ்க்கைத் தடத்தில் எம் பேரர்களுக்காக எம்மால் எந்தப் பழமரங்களையும் நட்டு வைக்க முடியாது. பனிப்பாறைகளை உடைத்து வேரூன்றும் முயற்சியிலேயே மூழ்கிக் கிடந்தவர்களால் பழ மரங்களை எவ்வாறு நட்டு வைக்க இயலும்?

அகதி வாழ்க்கையில் முனைப்போடு போராட முயன்றாலும் சரியான வழிகாட்டுதல்கள் இருக்கவில்லை. சுட்ட மண்ணாக இருந்த புலங்களில் நம் முன்னோர் பச்சை மண்ணாகவே இருந்தனர்.

பனிப்பாறைக்குள்
முளைகளாய்க் கிளம்பும்
எங்கள் அர்ச்சுனருக்கும்
ஒரு கண்ணன் கிடைப்பான்
எனதூரில் என்மகனுக்கு
பாரீசில்
நான் வாழ்ந்த
கதை சொல்வேன் (கட்டிடக் காட்டுக்குள்: பக் 30)

என்கின்றார் செல்வம் அருளானந்தம். பிள்ளைகளுக்காக இவர்கள் செல்வத்தைச் சேர்த்ததை விடவும் நிறையக் கதைகளைச் சேர்த்து கொண்டார்கள்.

அளவிலாத வலிகளைச் சுமந்தபடியே அடுத்த தலைமுறைகளுக்காகப் புதிய சமூகச் சூழலை உருவாக்கினார்கள். இக்கட்டுரைகளின் வழியே குறிப்பிட்ட இடர்களும், தாயகம் தொடர்ச்சியாகச் சந்தித்த துயரங்களும் வாழ்வில் நிலையாக இன்புறுவதற்கான வாய்ப்புகளை வழங்கவில்லை. தெரியாத தொழில், புரியாத மொழி, இணங்காத சூழல், கண்ணீராலும் குருதியாலும் எழுதப்பட்ட தாயகக் கடிதங்கள் என்பன அவர்களிடத்தே அமைதியை நெருங்க விடாது செய்தன.

நெருங்கிய முட்கள் நிறைந்த காட்டிடையே தொடர்ந்த பயணத்தில் ஆடைகள் கிழிந்து உடல் கீறி குருதி பெருகியது. தளராது ஒரு கையால் அம்மணத்தை மறைத்தபடியும் மறு கையால் வழியும் குருதியைத் துடைத்தபடியுமே கானகத்தைக் கடந்தார்கள்.

இறுகிக் கிடக்கும் பனிப்பாறைகளுக்குள் நம் முன்னோரது குருதியும் வியர்வையும் கணிசமானவளவு கலந்தேயிருக்கின்றன.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## இது பா.ஜ.க வெற்றியல்ல; மோடியின் தனி வெற்றி!

கடந்த மாதம் நடைபெற்ற இந்திய பொதுத்தேர்தலில் பாரதிய ஜனதாக் கட்சி அறுதிப் பெரும்பான்மையிலும் கூடுதலான இடங்களைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றியது.

இதனை எவரும் கட்சியின் வெற்றியாகப் பார்க்கவில்லை. மோடியின் தனித்துவ வெற்றியாகவே பார்க்கின்றனர்.

தாம் பங்குபற்றிய 400க்கும் அதிகமான பரப்புரைக் கூட்டங்களில் ஒன்றுக்குக்கூட தம்முடன் கட்சிப் பிரமுகர் எவரையும் மோடி அழைத்துச் செல்லவில்லை என்றால் பாருங்களேன்!

## மு. க தாங்கொணாத் துயரில்; 'லேடி' மீளாத் துயரத்தில்!

தமிழகத்தின் 39 தொகுதிகளில் ஒன்றில்கூட வெற்றி பெறாது, வேரோடும் வேரடி மண்ணோடும் தி.மு.க துடைத்து எறியப்பட்டுள்ளது. அழகிரி-ஸ்டாலின்-கனிமோழி மோதல் மட்டுமன்றி, ஈழத் தமிழருக்குச் செய்த துரோகத்துக்குக் கிடைத்த பரிசு இது. தாங்கொணாத் துயரில் மு.க. துவண்டு போயுள்ளார்.

ஜெயலலிதா 39 ஆசனங்களில் 37ஐக் கைப்பற்றி சாதனை படைத்தாராயினும், அவரும் ஆழ்ந்த துயரில் தவிக்கிறார். இவ்வளவு வெற்றி பெற்றும் மத்திய அரசாட்சியில் பேரம் பேசும் வாய்ப்பு இல்லாமற் போய்விட்டது என்பதே இதற்குக் காரணம்.

மோடிக்கு இப்படியொரு அபார வெற்றி கிடைக்காதிருந்திருப்பின், அவரின் கண்ணுக்குள் விரலை விட்டுத் துளாவி எடுத்திருப்பார் தமிழக 'லேடி!

## அம்மாவுக்கும் மகனுக்கும் ஒரு தசாப்த கட்டாய ஓய்வு?

அம்மா சோனியாவைத் தலைவராகவும் மகன் ராகுலை உபதலைவராகவும் கொண்டு அட்டகாச ஆட்சி நடத்திய இந்திய காங்கிரஸ் தலை குப்புற வீழ்ந்துள்ளது.

2019ம் ஆண்டுத் தேர்தலிலும் வெற்றி பெற்று ஆட்சியைத் தக்க வைக்கும் போக்கில் மோடி காய்களை லாவகமாக நகர்த்துவது ராகுலுக்குப் பெரும் சவால். நீண்ட நாள் காதலியான ஸ்பானிய மங்கையைத் திருமணம் செய்து குடும்பம் நடத்த ராகுலுக்கு அடுத்த பத்து வருடங்களை மோடி 'போனஸ்' ஆகக் கொடுத்துள்ளார்.

2019ல் ராகுலுக்கு 54 வயதாகும்போது, இத்தாலிய அம்மாவுக்கு 77 ஆகிவிடும்!.



## 91வது பிறந்த நாள் வாழ்த்து 'இன்று போல் என்றும் வாழ்க!'

தி.மு.க தலைவர் கருணாநிதியின் 91வது பிறந்த நாள் கொண்டாட்டம் இந்த மாதம் 3ம் திகதி இடம்பெற்றது. மனம் சரியில்லா விட்டாலும் ஊருக்காகவாவது கொண்டாட வேண்டியது அவசியமல்லவா?

மானமுள்ள ஈழத்தமிழன் ஒருவன் மு.க. அவர்களுக்கு அனுப்பி வைத்த பிறந்தநாள் வாழ்த்து பின்வருமாறு அமைந்திருந்தது: "இன்று போல் (தோல்வி வேதனையில்) என்றும் வாழ்க!".

## பதவியேற்பிலும் பதவிகளிலும் உறவுகளுக்கு இடமில்லை...

மோடியின் பதவியேற்பு விழாவுக்கு அழைக்கப்பட்டு பங்குபற்றியவர்கள் ஐயாயிரம் பேர். இவர்களுள் அவரது தாயார், சகோதரர்கள் என்று உறவினர்கள் எவருமில்லை.

'குடும்பம் வேறு, அரசியல் வேறு' என்பதைச் செயலில் காட்டிய புதிய பிரதமர், மறுநாள் தமது அமைச்சர்கள் அனைவருக்கும் கடும் உத்தரவொன்றை வழங்கினார்.

'அமைச்சர்கள் எவரும் தமது உறவினர் எவருக்கும் அமைச்சுகளில் பதவி வழங்கக்கூடாது' என்பதே இந்த உத்தரவு. மீறினால் வேலை காலி - அமைச்சரின்!

மகிந்த, சோனியா, மற்றும் கலைஞர் ஆகியோருக்கு இது சமர்ப்பணம்.

## தோல்வி இரண்டு தொகுதியில்; உருண்டது மூன்று தலைகள்

தமிழ்நாட்டின் இரண்டு தொகுதிகளில் மட்டுமே ஜெயலலிதா அணி தோற்றது. ஆனால் பதவி பறிபோன அமைச்சர்கள் மூவர்.

அமைச்சர்களுக்கு தேர்தலுக்கு முன்னரே விடுத்த எச்சரிக்கையை ஜெயலலிதா தேர்தல் முடிந்த கையோடு நிறைவேற்றி விட்டார்.
மேலும் சில தொகுதிகளில் அ.தி.மு.க தோற்றிருந்தால், இன்னும் சில அமைச்சர்கள் தலை உருண்டிருக்கும். நல்ல வேளை தப்பி விட்டார்கள்!

## அமைச்சர் வயதெல்லை 75; அத்வானிக்கு வைத்த திரி இது

இந்தியாவின் புதிய அமைச்சரவையின் எண்ணிக்கை 45. இதில் அங்கம் வகிப்பவர்கள் அனைவரும் 38 வயதுக்கும் 75 வயதுக்கும் இடைப்பட்டவர்கள்.

75 என்ற உச்ச வயதெல்லையை மோடி நிச்சயித்ததால் பாதிக்கப்பட்டவர் ஒருவரே. அவர் பாரதிய ஜனதாவின் மூத்த தலைவர்களில் ஒருவரான அத்வானி.

அத்வானியை அப்புறப்படுத்துவதற்காகவே மிகவும் ராஜதந்திரமாக வயயெல்லையை மோடி புகுத்தியதாக ஒரு தகவல்.

## கொளுத்திய வெயிலால் பாதியில் கலைந்த தலைகள்

டில்லியில் நடைபெற்ற பிரதமர் பதவியேற்பு வைபவம் திறந்த வெளியில் நடந்ததால், கொளுத்தும் வெயிலில் பிரமுகர்கள் துடிக்க நேர்ந்தது.

பின்வரிசையில் குளிர்பானம், ஐஸ் கிறீம், ஜிலேபி, பஃப்ஸ் என்பன பரிமாறப்பட்டன. இதனால் பின்வரிசைக்கு எழுந்து சென்ற பிரமுகர்கள் அப்படியே கலைந்து சென்று விட்டனர்.

ஆரவாரத்துடன் களைகட்டி ஆரம்பித்த விழா, இறுதியில் கூச்சலால் குழம்பிச் சோபையிழந்து முடிந்தது.

**உதாசனன்**
**உலா விருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ராஜ்மோகன்

பணிலமாடம் 3

# தங்க நிலாவில் சொக்கத் தங்கம் அள்ளலாம் வாங்கோ!

தங்க நகைகளுக்கு ஆசைப்படாத பெண்களைக் காண்பதே அரிது! உலகில் இருக்கக் கூடிய உலோகங்களில் என்றும் அழகும், கவர்ச்சியும், பெறுமதியும், நீண்டகால பாவனையும் கொண்ட தங்கம், பெண்களுக்குப் பிடித்துப்போனது உலக அரங்கில் தங்கத்தின் மதிப்பை இன்னும் அதிகரித்ததோடு மட்டுமல்லாமல் பல ஆண்களுக்குத் தலையிடியைக் கொடுக்கும் விடயமாகவும் மாறிவிட்டது.

தங்கம் எடுக்கும் சுரங்கத் தொழிலாளர்களின் ஏழ்மையை விபரிக்கும் 'தங்கம் எடுத்த கை அது தங்கம் பார்த்ததா?' என்ற கவிஞர் கண்ணதாசனின் பாடல் வரிகள், பெண்களுக்காகத் தங்கம் வாங்கும் ஆண்களையும், சீர்வரிசை செய்யும் பெற்றோர்களையும் நினைவுபடுத்திச் செல்கின்றது.

'அணிந்தால் 22 காரட் தங்கம் தான் அணிவேன்' என்று அடம்பிடிக்கும் பல பெண்களுக்கு தாங்கள் அணியும் தங்க நகைகளுக்குள் செப்பு அல்லது வெள்ளிக் கலப்படம் செய்திருக்கும் விடயம் தெரிந்திருக்கமாட்டாது.

தங்கத்தின் தூய்மை காரட் (Carat my;yJ Karat) எனப்படும் நியம அலகினால் அளவிடப்படுகின்றது. ஒரு தூய தங்கம் 24 காரட்டினைக் கொண்டிருக்கும். இந்தத் தூய வடிவிலான தங்கம் மிகவும் மென்மையான உலோகமாக பூமியில் இருந்து பிரித்தெடுக்கப்படுகின்றது. இந்த மென்மையான தூய தங்கத்தை வைத்து ஆபரணங்கள் செய்தால் அவை உறுதியாக இருக்கமாட்டாது என்ற காரணத்தினால் வெள்ளி, செம்பு, நாகம், பல்டியம் போன்ற பிற உலோகங்கள் தங்கத்துடன் கலக்கப்பட்டு ஆபரணங்கள் செய்யப்படுகின்றன. இப் பிற உலோகங்கள் கலக்கப்படும் விகிதத்தின் அளவை வைத்தே 22k, 18k, 16k, 10k காரட் போன்ற தங்கத்தின் தகுதிகள் தீர்மானிக்கப்படுகின்றன. அத்துடன் இவற்றின் விலைகளும் இதன் விகிதத்திற்கேற்றபபடி வித்தியாசப்பட்டிருக்கும். நமது பாவனையில் இருக்கும் 22 காரட் நகைகளில் 91.66% தங்கமும் 8.34% பிற உலோகங்களும் காணப்படுகின்றன. பசும் மஞ்சள் அல்லது பொன் மஞ்சள் நிறத்தின் மேல் உள்ள கவர்ச்சியால் நம் ஊர் நகைக் கடைக்காரர்கள் தங்கத்தினுள் செப்பினை மட்டுமே கலப்படம் செய்கின்றார்கள்.

இப்போது தங்க நிலாவில் தங்கம் அள்ளுவோம்.

ஐந்து வருடங்களுக்கு முன்னர் வேடிக்கையாகப் பேசப்பட்ட, சந்திரனில் தங்கம் தேடும் சுரங்கத் தொழில் (Moon mining) தற்போது சூடு பிடித்து வருகின்றது. சந்திரனின் மண்ணில் இருக்கும் பெறுமதிமிக்க மூலப் பொருட்களின் செறிவினால் அரசாங்கங்களும், தனியார் நிறுவனங்களும் இத்துறையில் முதலீடு செய்வதற்காக முண்டியடித்துக் கொண்டு நிற்கின்றன.

விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா, சந்திரனில் தங்கம் எடுக்கப் பயன்படும் அகழ்வு ரோபோக்களை (mining Robotic) தாயாரிப்பதற்கான விண்ணப்பங்களை அண்மையில் கோரியிருந்தது. இதனை அடுத்து பல தனியார் நிறுவனங்கள் விண்வெளிகளில் இயங்கும் ரோபோக்களைத் தயாரிக்கும் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டுவருகின்றன. மிக விரைவில் இந்த ரோபோக்கள் சந்திரனுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து கனிமங்கள் (Ore) பூமிக்குக் கொண்டுவரப்பட்டு, தங்கம் மற்றும் பூமியில் மிக அரிதாக கிடைக்கும் Platinum, Rhodium போன்ற பல மூலக்கூறுகள் பிரித்தெடுக்கப்படவுள்ளன. அத்துடன் அணு மின்நிலையங்களில் கதிர்வீச்சுகள் ஏதுமில்லாமல் மின்சாரம் எடுக்கப் பயன்படும் Helium-3 அதிகளவில் சந்திரனின் மண்ணில் இருந்து எடுக்க முடியும் என்றும் எதிர்பாக்கப்படுகின்றது. இதன் மூலம் சூழல் மாசடைவதையும், கதிர்வீச்சு ஆபத்துக்களையும் பெருமளவில் கட்டுப்படுத்தி மின்சாரத்தைத் தயாரிக்க முடியுமென்பது ஆராய்ச்சியாளர்களின் எதிர்பார்ப்பு.

செய்மதிகளின் தகவல்களின்படி சந்திரனின் தென்துருவப் பகுதிகளில் காணப்படும் மண்ணில் பூமியைவிட 100 மடங்கிலான செறிவுடன் தங்கம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் பூமியில் இல்லாத முக்கியமான மூலப் பொருட்களும் இங்கு செறிந்து காணப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் இருப்பதாக விண்வெளி ஆராய்சியாளர்கள் தெரிவித்துள்ளார்கள். எனினும், சந்திரனின் மண்ணை அகழ்வு செய்து அங்கிருந்து கனிமங்களை பூமிக்குக் எடுத்துவருவது மிகப்பெரும் செலவாகவும், சவாலாகவும் உள்ளது. தற்போதைய கணிப்பீட்டின்படி ஒரு தண்ணீர்ப் போத்தலை சந்திரனிற்கு கொண்டு சென்று வருவதற்கு கிட்டத்தட்ட அரை மில்லியன் அமெரிக்க டாலர்களுக்கு மேல் செலவாகுவதாக கூறப்படுகின்றது.

இந்த நிலையில் அரசாங்க விண்வெளிச் செயற்திட்டங்களை விட, தனியார் நிறுவனங்களின் செயற்திட்டங்கள் மேலும் செலவுளைக் குறைத்து பொருளாதார ரீதியாக லாபம் ஈட்டக்கூடிய வகையில் சந்திரனில் இருந்து கனிமங்களைக் கொண்டுவர முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் இவை தனியார் மயமாக்கப்படும் போது உலகளாவிய ரீதியில் 'யார் இந்த சந்திரனுக்குச் சொந்தக்காரர்?' என்ற சர்ச்சைகளும் அதனால் விண்வெளிச் சண்டைகளும் கூட உருவாகுவதற்கு சந்தர்ப்பங்கள் உள்ளன.

எது எப்படியோ சந்திரனில் இருந்து பெறப்பட்ட தங்கத்தில் நகை செய்யும் காலம் விரைவில் வந்துவிடும் என்பது உண்மை. அப்போது 'சந்திரனில் இருந்து பெறப்பட்ட தங்கத்தில் மட்டும் தான் நகை வேண்டும்' என்று தமிழ் பெண்கள் கேட்காவிட்டால் சரி (நாம் தப்பித்து விடுவோம்).●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா. சம்பந்தன்

# பெரிய புராணத்தில் ஒரு வழக்கு!



கயிலை மலையிலே சுந்தரர் இரு பெண்களைக் காமக் கண் கொண்டு பார்த்தார். உடனே இறைவன் பூஜை அறையிலே அல்வா தின்கின்ற குழந்தையை அம்மா சமையல் கூடத்திலே போய்ச் சாப்பிடு என்று சொல்வது போல, "சுந்தரா! பூமிக்குப் போய் அந்தப் பெண்களோடு வாழ்ந்து கொள்" என்று சொன்னான்.

உடனே சுந்தரர், "ஐயனே நான் தப்புச் செய்துவிட்டேன்! பூமிக்கு வந்து என்னைத் தடுத்து ஆட்கொள்ள வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்! அதன்படி மணப்பந்தலிலே கிழ அந்தணனாக வந்து இறைவன் அடிமை ஓலையைக் காட்டி தடுத்து ஆட்கொண்டார் என்பதெல்லாம் நாம் படித்துப் புளித்துப் போன பழைய கதைகள்!

எனினும் இந்தக் கதையிலே மிக முக்கியமான ஒரு சிவில் வழக்கு துல்லியமாக ஆராயப்பட்டு நீதிபதிகளாக ஊர்ப் பெரியவர்களே இருந்து தீர்த்து வைக்கப்பட்ட வரலாறு ஒன்று பக்தி மணலுக்குள் மறைந்து கிடக்கும் செய்தியை பலரும் அறிந்திருக்கவில்லை!

இன்றைய சட்டப் புத்தகங்களும் வரையறைகளும் தோன்றுவதற்கு முன்பே அம்பலம் என்கின்ற கோவில் வெளி மண்டபத்திலே பொழுது போக்கக் கூடியிருக்கும் முதியவர்கள் ஒரு அடிமை வழக்கை எப்படி விசாரித்தார்கள்! எதையெதையெல்லாம் ஆவணமாகக் கேட்டார்கள்! எதையெல்லாம் சாட்சியாக ஏற்றுக் கொண்டார்கள் என்பதை எல்லாம் சமூக இலக்கியமாக எழுதாமல் சமய இலக்கியமாக சேக்கிழார் பாடிவிட்டுப் போனதால் அதன் மதிப்பு எமக்குத் தெரியவில்லை!

நாம் சேக்கிழாரையும் இறைவனையும் சுந்தரரையும் விட்டு விடுவோம். ஒரு இளைஞன் கல்யாணம் கட்ட இருந்த மணப்பந்தலிலே ஒரு முதியவர் வந்து தம்பி உன் பரம்பரையே எனக்கு தொண்டு செய்யும் என்று உன் தாத்தா என்னோடு ஒப்பந்தம் போட்டு இருக்கின்றார். அதனாலே உன்னை எனக்குத் தேவை! நீ திருமணம் செய்து திசை மாறி போக முடியாது என்று தடுக்கிறார்! ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்கு அடிமை என்பது எங்கும் இல்லாத விடயம்! என் கல்யாண வேளையிலே இங்கு வந்து மடைத்தனமாக இந்தக் கிழவனார் குழப்பம் செய்கின்றார் என்று கோவிக்கின்றான் இளைஞன்! அவரிடம் இருந்த அடிமைப் பத்திரத்தையும் பறித்துக் கிழித்து விடுகின்றான்! வன்முறை தலையெடுக்கின்றது!

முதியவரும் விடுதாக இல்லை! பையன் இப்படிச் செய்வான் என்று தெரிந்து தான் போட்டோ கொப்பியைக் காட்டினேன்! நல்ல வேளை அசல் ஆவணம் பத்திரமாக என்னிடம் இருக்கின்றது என்கிறார்! வழக்கு திருவெண்ணைநல்லூர் பெரியவர்களிடம் வருகின்றது! முதியவர் வாதி! இளைஞன் பிரதிவாதி!

முதியவரே! இந்த வழக்கிலே உமக்கு நியாயம் கிடைக்க வேண்டும் என்றால் ஆட்சி அல்லது காட்சி அல்லது ஆவணம் என்ற மூன்றில் ஒன்றை எமக்கு நீர் காட்ட வேண்டும் என்கிறார்கள் நீதிபதிகள்!
இந்த அடிமைப் பத்திரத்தை எழுதிய தாத்தா உயிரோடு இருந்து அவரை அடிமையாக நீர் ஆட்சி செய்வதை எமக்கு காட்ட வேண்டும்! அல்லது அவர் அடிமையாக இருந்ததற்கு யாராவது சாட்சி சொல்ல வேண்டும்! அல்லது ஏதாவது ஆவணப்பத்திரம் வேண்டும்!
ஆவணம் தருகிறேன் என்றார் முதியவர்!
ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்று அயலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய் என்ன "முன்னே
மூட்சியிற் கிழித்த ஓலை படியோலை மூல ஓலை
மாட்சியில் காட்ட வைத்தேன்" என்றனன் மாயை வல்லான்!

ஆவணத்திலே அசைக்க முடியாத வரிகள்! சேக்கிழார் முதலமைச்சராக இருந்தவர் அல்லவா? சட்ட நுணுக்கங்களால் தோற்கடிக்க முடியாத உயில் ஒன்றை எழுதினார். இன்ன இடத்திலே இன்ன குலத்திலே பிறந்த இன்னாராகிய நான் இந்த ஊரிலே இந்த குலத்து பெரியவருக்கு நானும் என் வம்சமும் அடிமை செய்ய இசைந்து எழுதிக் கொடுக்கும் அடிமைப் பத்திரம் இது. சாட்சி கையெழுத்து!

அரு மறை நாவல் ஆதி சைவன் ஆரூரன்செய்கை
பெரு முனி வெண்ணெய் நல்லூர்ப் பித்தனுக்கியானும் என்பால்
வரு முறை மரபுளோரும் வழித் தொண்டு செய்தற்கு ஓலை
இருமையால் எழுதி நேர்ந்தேன் இதற்கு இவை என் எழுத்து.

நீதிபதிகள் விடவில்லை! இது தாத்தாவின் எழுத்துத் தானோ என்று தாத்தா வீட்டில் இருந்து அவர் எழுதிய பழைய ஓலைகளை எடுத்து வந்து ஆவண எழுத்துக்களோடு ஒப்பிட்டு சரிபார்க்கிறார்கள்! சரியாக இருந்ததால் முதியவருக்கு வெற்றி என்று அறிவித்து தீர்ப்பு வழங்குகிறார்கள்!

திரண்ட மா மறையோர் தாமும் திரு நாவலூரர் கோ முன்
மருண்டது தெளிய மற்ற மறையவன் எழுத்தால் ஓலை
அரண் தரு காப்பில் வேறு ஒன்று அழைத்து உடன் ஒப்பு நோக்கி
"இரண்டும் ஒத்திருந்தது என்னே! இனிச் செயல் இல்லை" என்றார்

வழக்கு முடிந்து புறப்பட இருந்த முதியவரை நீதிபதிகள் திரும்பவும் அழைக்கின்றார்கள்! முதியவரே! உங்கள் ஆவணத்திலே நீங்களும் இந்த ஊர் என்று போடப்பட்டிருக்கிறதே! இந்த ஊரிலே நீர் வாழ்வதற்கு என்ன ஆதாரம்! எங்கே உங்கள் வீடு? எவ்வளவு காலமாக அதில் வாழ்கின்றீர்? இது என்ன பொய் முகவரியா? உங்களை யாரும் இதுக்கு முதல் இந்த ஊரிலே கண்டதாகத் தெரியவில்லையே! உங்கள் வீட்டைக் காண்பியுங்கள்! என்கிறார்கள்!

திருமிகு மறையோர் நின்ற செழுமறை முனியை நோக்கி
"அருமுனி! நீமுன் காட்டும் ஆவணம் அதனில் எங்கள்
பெருமைசேர் பதியேயாகப் பேசியதுமக்கு இவ்வூரில்
வருமுறை மனையும் நீடு வாழ்க்கையும் காட்டுக" என்றார்.

முதியவர் அதையும் நிருபித்துத் தான் வழக்கிலே வெற்றியடைய முடிந்தது என்பார் சேக்கிழார்!

பன்னிரண்டாம் நூற்றாண்டிலே எழுதப்பட்ட இந்தச் செய்திகளில் முக்கிய ஆவணங்கள் இன்றைய போட்டோ கொப்பிகள் போன்று ஏதோ ஒரு வகையில் பிரதி எடுக்கப்பட்டு பாதுகாக்கப் பட்டிருக்கின்றன! ஒரு எழுத்தை இன்னொரு எழுத்தோடு ஒப்பு நோக்கி ஆராயும் சிந்தனைத் திறன் இருந்திருக்கின்றது! வீட்டு முகவரிகளின் நம்பகத் தன்மை பரிசோதிக்கப்பட்டு அங்கு வாழ்ந்த காலமும் உறுதி செய்யப்பட்ட வரலாறும் மனையும் நீடு வாழ்க்கையும் என்ற செய்யுள் வரிகளால் பதியப்பட்டிருக்கின்றது!

இவையெல்லாம் இன்றைய சட்ட வளர்ச்சிகள் உலகம் முழுவதும் செம்மைப்படுத்தப்பட முன்னரே தமிழர்களால் எங்கள் மூதாதையர்களால் கடைப்பிடிக்கப்பட்ட சட்ட நெறிமுறைகள்! இதையெல்லாம் புரிந்து கொள்ளாமல் சுந்தரர் இறைவனை பித்தா என்று ஏசினார்! பின்பு பித்தா பிறை சூடி என்று தேவாரம் பாடினார் என்ற அளவிலேயே எமது அறிவைக் குறுக்கிக் கொண்டு வாழ்ந்து மடிகின்றது தமிழ்ச் சமுதாயம்!●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குரு அரவிந்தன்

# உயர்ந்த கோபுரங்கள் 3

வாழ்க்கையில் கஷ்டப்பட்டு உயர்ந்தவர்களை மட்டுமல்ல, உயர்ந்து நிற்கும் கோபுரங்களையும் நான் மதிப்பவன் என்பதால் உயர்ந்த கோபுரங்களில் அடுத்ததாக மனதில் இடம் பிடித்தது காங்கேசன்துறையில் உள்ள கலங்கரை விளக்காகும்.

மாணவர்களாக இருந்த காலத்தில் குரு வீதியில் உள்ள குரு விளையாட்டுக்கழக மைதானத்தில் நாங்கள் விளையாடிவிட்டு நண்பர்கள் எல்லோரும் துவிச்சக்கரவண்டியில் கடற்கரைக்குச் சென்று சற்று நேரம் அமர்ந்திருந்து பலதும் பத்தும் கதைப்பதுண்டு. கப்பல் வந்திருக்கும் நாட்களில் காங்கேசந்துறைக் கடற்கரை மிகவும் பரபரப்பாக இருக்கும்.



அப்பொழுதெல்லாம் காங்கேசன்துறைத் துறைமுகம் கலங்கரை விளக்குக்கு அருகே, கிழக்குப் பக்கத்தில் கோட்டை வாசலில் இருந்தது. ஒற்றைக் காலில் நின்று தவம் செய்யும் வெள்ளை நிறக் கொக்குபோலக் கடற்கரையில் தவமிருக்கும் இந்தக் கலங்கரை விளக்கை அதிசயமாக நான் அண்ணார்ந்து பார்ப்பதுண்டு.

காங்கேசன்துறைச் சந்திக்கு அருகே இருக்கும் இந்தக் கலங்கரை விளக்கு சரியாக ஆறு மணிகெல்லாம் ஒளி தரத் தொடங்கிவிடும். பருத்தித்துறை - கீரிமலை வீதியைக் காங்கேசன்துறை - யாழ்ப்பாணம் வீதி சந்திக்கும் இடத்திற்கருகே (AB16 – AB21) இந்தக் கலங்கரை விளக்கம் அமைந்திருக்கிறது.

எங்கள் காலத்தில் எங்க ஊர் மக்களால் மதிக்கப்பட்ட 'வெளிச்சவீட்டு' வல்லிபுரம் என்று அழைக்கப்பட்ட பெரியவர்தான் இந்தக் கலங்கரை விளக்கு தினமும் ஒளிதரக் காரணமாய் இருந்தார். அவரிடம் உத்தரவு பெற்று நண்பர்கள் எல்லோரும் இரண்டு மூன்று தடவைகள் அந்தக் கலங்கரை விளக்கின் உச்சிக்கு உள்ளே இருந்த ஏணிப்படிகள் மூலம் ஏறிச் சென்று சுற்றிவர உள்ள ஊர்களின் அழகைப் பார்த்து இரசித்திருக்கின்றோம். குறிப்பாக வடக்கே பாக்கு நீரணை, கிழக்கே பலாலி, தெற்கே தெல்லிப்பளை, மேற்கே கீரிமலை என்று எல்லா ஊர்களையும் ஒரே இடத்தில் நின்று பார்க்க முடிந்தது.

தொடக்கத்தில் கலங்கரை விளக்கின் உச்சியில் எண்ணெயில் எரியும் பெரிய விளக்குத்தான் இருந்ததாம். பின்னைய நாளில் மின்சார விளக்காக அதை மாற்றியிருந்தார்கள்.

'அலைமேல் அலையடித்தால் கோட்டைச் சுவரும் இடியும்' என்ற உண்மையை வாய்பிளந்து வானம் பார்த்துக் கரையோரத்தில் கிடக்கும் 16ம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட கோட்டைச் சுவர் சொல்லாமல் சொல்லி நிற்கிறது. இந்தக் கோட்டைச் சுவருக்கு நடுவேதான் காங்கேசன்துறை கலங்கரை விளக்கு இப்பொழுதும் கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றது.

பாரம்பரியமாய், ஆண்டாண்டு காலமாய் தமிழனால் ஆளப்பட்டு வந்த அந்த மண், முதலில் 1505 இல் போர்த்துக்கேயராலும், அதைத் தொடர்ந்து 1660களில் ஒல்லாந்தராலும், அதன்பின் 1798 இல் ஆங்கிலேயராலும் ஆக்கிரமிக்கப்பட்டது. இலங்கையில் உள்ள அதிகமான கலங்கரை விளக்குகள் ஆங்கிலேயர் காலத்தில்தான் கட்டப்பட்டன. கொழும்பில் உள்ள பழைய மணிக்கூட்டுக் கோபுர வெளிச்ச வீடுதான் 1860 இல் ஆங்கிலேயரால் முதன் முதலாக இலங்கையில் கட்டப்பட்ட கலங்கரை விளக்காகும்.

சுமார் 25 கலங்கரை விளக்குகள் இலங்கையில் இருந்தாலும், இவற்றில் சுமார் 14 கலங்கரை விளக்குகளே தற்போது செயற்பட்டு வருகின்றன. இவற்றில் சில இலங்கை துறைமுகக் கட்டுப்பாட்டுச் சபையின் கீழும், வேறு சில இலங்கை கடற்படையின் கட்டுப்பாட்டிலும் இருக்கின்றன. ஒவ்வொரு கலங்கரை விளக்கிற்கும் ஒவ்வொரு தனித்தன்மையுண்டு.


பதினைந்து வினாடிகளுக்கு ஒருதடவை என்ற கணக்கில் அடுத்தடுத்து ஒன்றின்பின் ஒன்றாக மூன்றுதடவை மின்னுவதுதான், இந்தக் கலங்கரை விளக்கின் தனித்தன்மை! இந்தக் கலங்கரை விளக்கு காங்கேசன் துறையில், பாக்குநீரிணையின் தென்கரையில், 73அடி உயரத்திற்கு வானளாவி நிற்கிறது. கோட்டை அத்திவாரத்திற்குள், ஆங்கிலேயரால் 1893ம் ஆண்டு கட்டி எழுப்பப்பட்ட இந்தக் கலங்கரை விளக்கின் வெளிச்சம் 14 கடல்மைல் தூரம்வரை தெரியக்கூடியது.

வடபகுதிக் கடலில் கடற்றொழில் செய்யும் மீனவர்களுக்கு இந்தக் கலங்கரை விளக்கு பெரிதும் நன்மை பயக்குவதாக, வழிகாட்டியாக இருந்தது. அதிபாதுகாப்பு வலயத்திற்குள் அகப்பட்டு இருக்கும் இந்தக் கலங்கரை விளக்கு உள்நாட்டுப் போர் காரணமாக, பராமரிக்க முடியாமல் சில வருடங்கள் இயங்காமல் இருந்தது.

இப்போது இந்தக் கலங்கரை விளக்கு திருத்தப்பட்டு மீண்டும் ஒளிதரத் தொடங்கி இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கவிப்பேரரசு வைரமுத்து

# சிறுநீரின்றி அமையாது இவ்வுலகு

*வைரமுத்து அவர்கள் கவிப்பேரரசு மட்டுமல்ல, சிறந்த பேச்சாளரும், சிறந்த எழுத்தாளரும்கூட. கேள்விகளுக்கு இவர் அளிக்கும் பதில்கள் சுவையுடன் பல தகவல்களைக் கொண்டதாக அமைவது வழக்கம். சில மாதங்களுக்கு முன்னர் 'ஆனந்தவிகடன்' சஞ்சிகையில் வாசகர்கள் கேள்விகளுக்கு இவர் பதில் வழங்கியிருந்தார். சென்னை - 33 வாசியான ம.சுயம்புலிங்கம் கேட்ட கேள்வி, "சிறுநீர் - சிறுகுறிப்பு வரைக" என்பது. அக்கேள்விக்கு வைரமுத்து அவர்கள் வழங்கிய பெருங்குறிப்பு இங்கு நன்றியுடன் பிரசுரிக்கப்படுகிறது.*

இந்த உலகம் கடல் நீரால் சூழப்பட்டு இருப்பதுபோல், உயிர்கள் சிறுநீரால் சூழப்பட்டு இருக்கின்றன. சிறுநீர் இழிவானதன்று. மாரடைப்பைத் தடுக்கும் மருந்து சிறுநீரில் தயாரிக்கப்படுகிறது.

சிறுநீரில் தங்கமெடுக்க முனைந்த ஆராய்ச்சி, வெள்ளை பாஸ்பரஸ் கண்டுபிடிப்பதில் முடிந்தது.

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு வரைக்கும் தோலின் மினுமினுப்புக்கு உடம்பெங்கும் சிறுநீர் பூசிக்கொண்டார்கள் இங்கிலாந்துப் பெண்கள்.

சிறுநீரில் ஊறிய புல்லைத்தான் பல் துலக்கப் பயன்படுத்துகிறார்கள் எஸ்கிமோக்கள்.

கோமேயம்தான் சிறந்த கிருமி நாசினி என்று கண்டுபிடித்தவர்கள் இந்துக்களும் ஆபிரிக்கர்களும்.

ஒரு டஜன் எலிகள் கூடி ஒரு நாள் முழுக்கச் சிறுநீர் கழித்தாலும் ஒரு டீஸ்பூன்கூட நிரம்பாதாம். ஆனால், ஒரு யானை ஒரு நாளில் 49 லிட்டர் சிறுநீர் கழிக்கிறதாம்.

கொசுவுக்கும் (நுளம்பு) சிறுநீர் உண்டு. ஆனால், அதன் கழிப்பறைதான் உலகத்திலேயே உயர்ந்தது. மனித உடல்தான் கொசுவின் சிறுநீர்க் கழிப்பறை.

உடம்பில் ஊசிபோடும் கொசு, தன் சிறுநீரை உடம்புக்குள் கழித்துவிட்டு அந்தக் காலி இடத்தை நம் ரத்தத்தால் நிரப்பிக்கொள்கிறது.

சிங்கத்தின் சிறுநீர் வாசம் அத்துணை சீக்கிரம் தீராது. காடுகளில் குறிப்பிட்ட எல்லைகளில் சிறுநீர் கழித்துச் செல்லுமாம் சிங்கம்.

இது என் காடு, இதற்கு மேல் எதிரிகள் வரக் கூடாது என்று எச்சரிக்கை செய்யுமாம் சிங்கத்தின் சிறுநீர் வாசம்.

ஆட்டுக் கிடாய் தன் உடம்பெங்கும் சிறுநீரைப் பூசிக்கொள்ளுமாம். அது வெள்ளாட்டைப் பாலுணர்வுக்கு அழைத்து வெறியூட்டுமாம். ஆடுகளுக்கு 'சென்ட்' ஆகிவிடுகிறது சிறுநீர்.

மொஹியோ பாலைவனத்து ஆமைகளின் உடம்பில் மூன்றில் ஒரு பங்கு சிறுநீர்தானாம். உடம்பில் நீர்ச் சத்து குறைந்துபோனால், சிறுநீரைத்தான் சுழற்சிக்கு அனுப்புமாம்.

மனிதனின் பிரச்னைகள் ஆரம்பமாவது இரண்டில். சிறுநீர் அதிகம் பிரிவது மற்றும் சிறிதும் பிரியாதது. அவரவர் சிறுநீர் பருகுதல் அவரவர் நோய்தீர்க்கும் என்பதும் ஒரு மருத்துவ நம்பிக்கை.

எனவே, சிறுநீர் என்பது சிறுமைக்குரிய நீரல்ல. "சிறுநீரின்றி அமையாது இவ்வுலகு". (இந்தியாவின் முன்னாள் பிரதமர்களில் ஒருவரான மொரார்ஜி தேசாய் தினமும் காலையில் தேநீருக்குப் பதிலாக, தமது சிறுநீரையே அருந்துவதை பகிரங்கமாக பல நிகழ்வுகளில் தெரிவித்து வந்தவர் என்பது இங்கு குறிப்பிட வேண்டிய முக்கிய தகவல்.)

# இளமையாக இருக்க சிறுநீர் அருந்தும் பெண்

உடல் ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக கடந்த 20 வருடங்களாக பிரிட்டனைச் சேர்ந்த பெண்ணொருவர் தனது சிறுநீரை, காலைப் பானமாக அருந்தி வருகின்றார். பிரிட்டனைச் சேர்ந்த சில்வியா செண்டலர் என்ற பெண்ணே இவ்வாறு செய்து வருகின்றார்.

62 வயதுடைய இவர், பார்வைக்கு மிகவும் இளமையானவராகவும் ஆரோக்கியமுடையவராகவும் காணப்படுகின்றார். தனது இளமையான தோற்றத்திற்கு சிறுநீரே காரணமென அவர் உள்நாட்டு சஞ்சிகையொன்றுக்கு கூறியுள்ளார்.

தனது சிறுநீர் அருந்தும் செயற்பாடு காரணமாக கடந்த 10 வருடங்களாக அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுகொண்டதில்லை என்றும் கூறியுள்ளார்.

'நான் எனது சிறுநீரை அருந்துவதால் ஆரோக்கியமாகவும் திடகாத்திரமாகவும் உள்ளேன். சிறுநீரானது எனது இளமையை பாதுகாக்கின்றது. எனக்கு 62 வயது என்று கூறினால் ஆச்சரியப்படுகின்றார்கள்' என அவர் தெரிவித்துள்ளார்.

'நான் காலை, மாலை வேளைகளில் ஒவ்வொரு கோப்பை சிறுநீரை அருந்துகின்றேன். அது சுவையாகவும் நீரைப் போன்றும் காணப்படுகின்றது. ஆனால், நீரைவிடவும் இனிப்பாக காணப்படுகின்றது. நான் கடந்த 10 வருடங்களாக வைத்தியரை அணுகியதில்லை. அதேபோல் எனக்கு தடிமனும் ஒருநாளும் ஏற்பட்டதில்லை. கடந்த 10 வருடங்களாக உடற்பருமனையும் ஒரே அளவில் வைத்திருக்கிறேன்.

பிரிட்டனின் பேர்மிங்கத்தில் மருந்து விற்பனை நிலைய உரிமையாளராக உள்ள மேற்படி பெண் முதலில் சிறுநீரை அருந்துவதற்காக சிரமம் கொண்டதாகவும், பின்னர் பழச்சாறுகளுடன் கலந்து அதனை அருந்தியதாகவும் தெரிவித்துள்ளார்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குயின்ரஸ் துரைசிங்கத்தின் இரண்டு நூல்கள் 'கவிச்சரம்', 'வரலாற்றில் இன்று' வெளியீட்டு விழா














எழுத்தாளரும், கவிஞரும், வானொலிக் கலைஞரும், சமூகப் பணியாளருமான குயின்ரஸ் துரைசிங்கத்தின் 'கவிச்சரம்' (கவிதைத் தொகுப்பு), 'வரலாற்றில் இன்று' (தகவல் தொகுப்பு) ஆகிய இரு நூல்களின் வெளியீட்டு விழா கடந்த மாதம் 24ம் திகதி ஸ்காபரோவில் நடைபெற்றது. பிற்பகல் நான்கு மணிக்கு ஆரம்பமான விழா நிறைவான அவையோர் மத்தியில் நேர்த்தியாக நடைபெற்று ஏழு மணிக்கு நிறை வடைந்தது. திரு. ஜுட் அலோஷியஸ் தொடக்கவுரை நிகழ்த்தினர். நூலாசிரியரின் புதல்வர்களான சங்கீத் - கவின் ஆகியோர் வரவேற்புரை நிகழ்த்தினர். 'தமிழர் தகவல்' முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் விழாவுக்குத் தலைமை தாங்கினார். அருட்திரு பீற்றர் ஜித்ரேந்திரன், திரு. எஸ் இராசநாயகம், அருட்திரு பெர்னாட் அல்போன்சஸ், திரு. மதிவாசன் ஆகியோர் ஆசியுரைகளும் வாழ்த்துரைகளும் வழங்கினர். திரு. எஸ் பத்மநாதன், கவிஞர் பொன்னையா விவேகானந்தன், கலாநிதி த. வசந்தகுமார், பேராசிரியர் ஏ. ஜே. சந்திரகாந்தன் ஆகியோர் நூல்களின் வெளியீட்டுரை, ஆய்வுரைகளை நிகழ்த்தினர். குயின்ரஸ் துரைசிங்கத்தின் மூத்த சகோரி ஜெனிற்றா மரியாம்பிள்ளையால் எழுதிப் பிரசுரித்து வன்னியில் வெளியிடப் பட்ட கவிதை மற்றும் சிறுகதைத் தொகுதிகளின் அறிமுக நிகழ்வு, விழாவின் சிறப்பம்சமாக இடம்பெற்றது. முனைவர் இ. பாலசுந்தரம் இந்நூல்களை அறிமுகம் செய்து உரையாற்றினார். நன்றியுரை மற்றும் ஏற்புரைகளையடுத்து திருமறைக் கலாமன்ற கலைஞர் இலியாஸ் அருளானந்தம் தலைமையில் நூலாசிரியர் மதிப்பளிப்பு வெகு சிறப்பாக இடம்பெற்றது. தமது ஐம்பதாவது பிறந்த நாளான மே மாதம் 24ம் திகதி தமது இரண்டு பெறுமதியான நூல்களைச் சமூகத்துக்கு வழங்கிய குயின்ரஸ் துரைசிங்கத்துக்கும், அதற்குத் துணையாகவிருந்த அவரது மனைவி டிலியா மற்றும் புதல்வர்களுக்கும் அவையோர் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்தது விழாவின் மகுடமாக அமைந்தது.











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவில் வரலாறு கண்ட தமிழினப் படுகொலை




கனடியத் தமிழர்கள் பல்லாயிரக் கணக்கில் உணர்வால் ஒன்றிணைந்து, முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலையின் ஐந்தாம் ஆண்டை நினைவு கூர்ந்த அறிவுபூர்வமான நிகழ்வு கடந்த மாதம் 18ம் திகதி ஸ்காபரோவில் அல்பேர்ட் காம்பெல் சதுக்கத்தில் எழுச்சிபூர்வமாக நடைபெற்றது. சிறியோரும், இளையோரும், பெரியோரும் சாரிசாரியாக அல்பேர்ட் காம்பல் திறந்தவெளி அரங்கில் ஒருங்கு சேர்ந்து இலங்கை அரசின் தமிழினப் படுகொலையை அம்பலப்படுத்திய ஒரு வரலாற்று நிகழ்வாக இது அமைந்தது. இந்நினைவு நாளில் சம்பிரதாய நிகழ்வான பொதுச்சுடரினை தஞ்சாவூர் முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றப் பிரமுகரும் முனைவருமான திரு. நடராஜன் அவர்களும், கனடியத் தமிழர் தேசிய அவையின் தலைவரும் பேராசியருமான திரு. சிறிரஞ்சன் அவர்களும், புதிய ஜனநாயகக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இந்நாள் மேயர் வேட்பாளருமாகிய Olivia Chow அவர்களும் ஏற்றிவைத்தனர். தமிழினப் படுகொலைநினைவு நாளில், நான்கு சுவர்களுக்குள் கூடி அழுது கவலை கொண்டாட இது நேரமல்ல என்பதை மிகத் துல்லியமான உரைகள் வழியாகவும், எழுச்சிக் கலைநிகழ்ச்சிகள் வாயிலாகவும், தேசியச் சின்னங்களின் அடையாளங்களினூடாகவும் இந்நிகழ்வு அரங்கேற்றியது. 2009ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பேரவலத்திற்குப் பின்னர் கனடியத் தமிழர்கள் கூட்டம் கூட்டமாக வந்து, ஆயிரமாயிரமாகச் சேர்ந்து பேரினவாதச் சிங்கள அரசுக்குத் தங்கள் உணர்வையும் உறுதியையும் எடுத்துரைத்த முக்கிய நிகழ்வாகவும், எந்தத் தடையும் புலம்பெயர் தமிழரைப் புலன்பெயர






























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லையின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நிகழ்வு: மே - 18





வைக்காது என்பதையும் இந்த நிகழ்வினூடாகத் தெளிவாக வெளிப்படுத்தினர். தஞ்சாவூர் முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றப் பிரமுகர் திரு. நடராஜன் இந்நிகழ்வில் சிறப்பாளராகப் பங்கேற்று உரையாற்றினார். தெளிந்த நீரோடை போன்ற ஆற்றொழுக்கான இவரது உரை தமிழகத்தில் பொங்கி எழுந்து நிற்கும் தமிழீழத் தேசிய உணர்வை விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துச் சொன்னது. தாயகத் தமிழர்கள் அடக்குமுறைக்குள் தள்ளப்பட்டுள்ள இன்றைய காலகட்டத்தில், தமிழக உறவுகளும் புலம்பெயர் தமிழர்களும் இணைந்து செயற்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்திய திரு. நடராஜன், ஈழத்தமிழரின் அழிவுக்கு வழிவகுத்த சோனியா காந்திக்கும், கலைஞர் கருணாநிதிக்கும் தங்கள் வாக்குகள் மூலம் மக்கள் நல்ல பாடம் கற்பித்துள்ளதாக திரண்டிருந்த மக்களின் பலத்த கரவொலிக்கு மத்தியில் குறிப்பிட்டார். தமிழ் உறவுகளுக்காக அடுத்தடுத்துப் பல தீர்மானங்களை நிறைவேற்றிய தமிழக முதல்வர் ஜெயலலிதா திடமான சிறந்த நிர்வாகி என்றும், அவர் பணி தொடர்ந்து அதே பாதையில் தொடர தமிழக மக்கள் அவருக்கு அமோக வெற்றியை வழங்கியுள்ளனர் என்றும் திரு. நடராஜன் தமது உரையில் முக்கியமாகத் தெரிவித்தார். அன்றைய நிகழ்வில் அனைத்துக்கட்சிப் பாராளுமன்ற மாகாண, நகரசபை பிரமுகர்களும், வேட்பாளர்களும் கலந்து கொண்டு மே 18 நாளை நினைவு கூர்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒளிப் படங்கள்: செய்தி.கொம் )























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NOW HIRING

JOIN OUR DYNAMIC TEAM

Looking for a Career change?
Freedom, Flexibility and
Unlimited income potential

Give us a Call today

Chandran Rasalingam CHS
President & CEO
Dir: 416 909 0400

INFORCE LIFe
Financial Services Inc.

Bus: 416 321 6000 x400
www.inforcelife.com
career@inforcelife.com
10 Milner Business Court, Suite 707, Scarborough ON M1B 3C6
Like us on Facebook






Brimley Road Medical Centre
WALK-IN CLINIC
&
FAMILY PRACTICE

★ புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்
★ ஆண், பெண் குடும்ப மருத்துவர்களுடன் 7 நாட்கள் சேவை

Dr. உதயன் சோமசுந்தரம், MD,CCFP
Dr. சுபாதினி செந்தில் மோகன், MD,CCFP
Dr. நஸ்ரத் கான், MD,CCFP

| | |
|---|---|
| திங்கள் - வியாழன் | 9:00-7:00 |
| வெள்ளி...... | 9:00-5:00 |
| சனி & ஞாயிறு | 9:00-2:00 |

★ ஆய்வுகூடச் சேவை (Life lab)
★ மருந்தகச் சேவை (IDA Pharmacy),
★ இயன் மருத்துவ சேவை (Brimley Physiotherapy)

(416) 412 3333

3333 Brimley Road
Scarborough, ON M1V 2J7
(Between Steels & McNicoll)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# வால் எலும்பு வலி

உள்ளே நுழைந்த அந்த இளம் மாணவியின் முகத்தில் இனம் புரியாத தயக்கம். 'இருங்கோவன்' கதிரையை அவளை நோக்கி நகர்த்தினேன்.

உட்காரவில்லை.

'இருக்கிறாள் இல்லை, வலிக்குதாம்' என இடைமறித்தாள் அம்மா.

'எங்கை வலி' என்று கேட்டதும் அந்தச் சின்னத் தேவதை வெட்கப்பட்டாள்.

மேலும் பல கேள்விகள் கேட்டதும் அது வால் எலும்பு வலி என்பது எனக்குப் புரிந்தது. அவள் வெட்கப்படுவதில் நியாயம் இருக்கிறதுதான்.

தேவதைக்கு வாலா என அதிசயிக்காதீர்கள். உங்களுக்கும் எனக்கும் உள்ளது அவளுக்கு மட்டும் இல்லாது போகுமா?

மனிதன் உட்பட முள்ளந்தண்டு மிருகங்களுக்கு (Vertebrates) முள்ளந்தண்டு (முதுகெலும்பு) இருக்கிறது. இது ஒரு எலும்பு அல்ல. பல தனித்தனி எலும்புகளின் சேர்க்கைகளால் ஆனது என்பது உங்களுக்குத் தெரியும்.

கழுத்தில் ஆரம்பித்து முதுகு வழி தொடர்ந்து இடுப்புப் பகுதியையும் கடந்து இறுதியில் முடிவது இந்த வால் எலும்புகளில்தான். இவ் எலும்பை ஆங்கிலத்தில் coccyx என்பார்கள். தமிழில் குத எலும்பு, வால் எலும்பு, உள்வால் எலும்பு என்று எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம்.

இவை பொதுவாக எந்த ஈடாட்டமும் இன்றி செயலற்று வாழாதிருப்பவை. எனவே இவற்றில் நோய் ஏற்படுவது குறைவு. ஆயினும் சில தருணங்களில் நோய் ஏற்படவே செய்யும்.

அந்தக் குத எலும்பில்தான் இவளுக்கு வலி. படுக்கையில் கிடத்தி, பிட்டப் (குண்டி) பகுதி தசை மடிப்புகளை விரித்து, மலவாயிலுக்கு சற்று மேலே உள்ள குத எலும்பின் நுனிப் பகுதியைத் தொட்டபோது கடும் வலி இருப்பது புரிந்தது.

அக்கம் பக்கம் உள்ள சருமத்திலோ சதைப் பகுதிகளிவோ வீக்கம் வலி வெப்பம் எதுவுமே இல்லை என்பதை நிச்சயப்படுத்தி வேறு நோய் என்பதை உறுதிப்படுத்த முடிந்தது.

## குத எலும்பு அழற்சி

இவ்வாறு குத எலும்பில் வலி ஏற்படுவதைக் குத எலும்பு அழற்சி (Coccydynia) எனலாம். ஆயினும் அதன் அருகில் உள்ள ஏனைய பகுதிகளிலும் இதுபோன்ற வேறு வலிகள் ஏற்படலாம் என்பதால் கவனம் எடுக்க வேண்டும்.

உதாரணமாக, மலவாயில் கட்டிகள், மூலக் கட்டிகள், இடுப்பு எலும்பு வலிகள், தசைப் பிடிப்புகள் போன்றவையும் அவ்விடத்தில் வலியைத் தோற்றுவிப்பதுண்டு.

இந்த வலியானது கடுமையானது அல்ல என்றபோதும் 'அம்மல்' வலியாகத் தொடரும். அவ்விடத்தை அழுத்தும் போது மிகக் கடுமையாக இருக்கும்.

- திடீரெனக் குண்டி அடிபட உட்கார்ந்தாலோ,
- துவிச்சக்கரம் போன்ற அழுத்தும் இருக்கைகளிலும்,
- முச்சக்கர வண்டி போன்ற குலுக்கும் வாகனங்களிலும் பயணம் செய்தாலோ மோசமாகும்.

இந்நோய் ஏன் ஏற்படுகிறது என்பதைத் தெளிவாகச் சொல்வது சிரமம். பொதுவாக அடிபட உட்காரல், விழுதல். பின்புறமாக சுவரோடு மோதுதல் போன்றவை காரணமாக இருக்கலாம்.

இதைக் கண்டறியவோ நோயை உறுதிப்படுத்தவோ பரிசோதனைகள் எதுவும் அவசியமில்லை. நோயாளி சொல்வதைக் கேட்டு மருத்துவர் பரிசோதித்துப் பார்ப்பதன் மூலம் நோய் நிர்ணயம் செய்ய முடியும். அருகில் உள்ள தசைப் பகுதிகளிலோ எலும்புகளிலோ பிரச்சனை இருக்கலாம் எனச் சந்தேகித்தால் மட்டும் CAT Scan, MRI Scan போன்ற பரிசோதனைகள் அவசியமாகும்.

இந்த வலி வந்தவுடன் மருத்துவரை நாடி ஓட வேண்டிய அவசியமில்லை. அடிப்பகுதி அண்டாதவாறு குஷன் அல்லது துணிகள் வைத்து மென்மையாக்கப்பட்ட இருக்கைகளிலேயே உட்கார வேண்டும். நீண்டநேரம் தொடர்ந்து உட்காருவதையும் தவிர்க்க வேண்டும்.

## மருத்துவம்

பரசிட்டமோல் அல்லது வீரியம் கூடிய வலி நிவாரணிகள் வலியைத் தணிக்க உதவும்.

ஆயினும் நரம்புகளை அமைதிப்படுத்தும் மருந்துகள் கூடுதலாகப் பலன் தரலாம்.

ஸ்டீரொயிட் ஊசி மருந்தை அவ்விடத்தில் ஏற்றுவது ஆச்சரியகரமான முறையில் வலியைத் தணிக்கும். வலியைத் தணிப்பது மட்டுமின்றி நோயிலிருந்து பூரண விடுதலையை பெரும்பாலும் கொடுக்கும். அனுபவமுள்ள மருத்துவர்கள் இதைத் தங்கள் மருத்துவ ஆலோசனை அறையில் வைத்தே போடக் கூடியதாக இருக்கும். சில வகை மசாஜ் முறைகளும் பயிற்சிகளும் உதவலாம்.

வலி கடுமையாகவும் தொடர்ந்து தொல்லை கொடுப்பதாகவும், ஏனைய சிகிச்சைகளுக்கு தணிவதாக இல்லையெனில் சத்திரசிகிச்சை செய்யப்படலாம். Coccygectomy எனப்படும் இந்தச் சிகிச்சையில் அந்த குத எலும்பை அகற்றுவார்கள். ஆயினும் அதற்கான தேவை பெரும்பாலும் ஏற்படுவதில்லை.

## நீங்கள் செய்யக் கூடியவை

சுடு ஒத்தடம் கொடுப்பது, ஐஸ் வைப்பது போன்றவை உதவக் கூடும். ஆயினும் அந்த இடத்தில் இவற்றைச் செய்வது மிகுந்த இடைஞ்சலானது என்பதை மறுப்பதற்கில்லை.

வலி உள்ள இடம் மீண்டும் தாக்குப்படாதவாறு கவனமாக இருக்க வேண்டும். அதேபோல அவ்விடத்திற்கு ஆறுதல் கொடுப்பது அவசியம்.

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல மெதுமையான இருக்கைகளில் உட்கார வேண்டும். மெத்தை, தலையணை, குஷன் போன்றவற்றை இருக்கையில்

(24ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**

(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7

Scarborough, Ontario M1K 5JB





# Computek College

BUSINESS • HEALTH CARE • TECHNOLOGY

Est. 1991

www.computek.edu

We provide assistance for Second Career funded Applicants. E.I receiving /received, Maternity benefits received, WSIB, Ontario Works clients & New Immigrants welcome

**SECOND CAREER**

**You maybe eligible upto $28,000 to pay for:**

- Living Expenses
- Transportation
- ChildCare
- Books
- Tuition and other

**Diploma Programs**

- Early Childcare Asst (ECA)
- Personal Support Worker (PSW)
- Medical Office Admin (MOA)
- Computerized Accounting
- Business Administration
- Application Development
- Network Engineering
- Enterprise Network Engineering

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |

Not all the courses are available at all the locations




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நக்கீரன்



# என்றுமுள்ள செந்தமிழ் 77

## பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு தொடர்வதாக

அய்ம்பெரும் காப்பியங்களில் சிலப்பதிகாரமே தலை சிறந்த காப்பியமாகப் போற்றப்படுகிறது. அதனால்தான் 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்" என்று பாரதி மெச்சிப்பாடினான். இனிய இசைப்பாடல்கள் பலவற்றையும் தன்னகத்தே கொண்ட ஒரு தனிப்பெரும் படைப்பு சிலம்பு. இதில் கவிதைச் சுவையும் இசை நுணுக்கமும் ஆடல் கலையின் சிறப்பும் நிறைந்துள்ளன.
இருந்தும் தமிழ் மக்களிடையே இக்காப்பியத்தின் கலைச் சிறப்பு, கவிதைநடை, பிற இலக்கியச் சுவைகள் அறியப்படாமலே இருந்தன. உ. வே சாமிநாதய்யர் சிலப்பதிகாரம் குறித்த ஏடுகளைத் தேடி ஒரு வித்துவானிடத்தில் சென்ற போது சிலப்பதிகாரம் என்ற சுவடியைப் பற்றிக் கேட்டார். ஆனால் அவர் சிலப்பதிகாரம் என்றால் அதற்குப் பொருளே இல்லை 'சிறப்பதிகாரம்' என்ற பெயருள்ளதாய் இருத்தல் வேண்டும் என்றாராம். இதன் மூலம் படித்தவர்கள் கூட சிலப்பதிகாரம் பற்றி அறியாத காலம் ஒன்று இருந்ததைக் காட்டுகிறது.

1650 க்கு முன்புவரை கற்றோர்க்கு மாத்திரம் தெரிந்ததாக இந்நூலானது விளங்கியது. 16ஆம் நூற்றாண்டில் நச்சினார்க்கினியர் இந்நூலைத் தமது தொல்காப்பிய உரையில் பல இடங்களில் மேற்கோள் காட்டியுள்ளார். மேலும் 14ஆம் நூற்றாண்டினரான பரிமேலழகரும், மயிலைநாதரும் இக்காப்பியப் பகுதிகளை பல இடங்களில் ஆண்டுள்ளனர். மேலும் அதே நூற்றாண்டில் வாழ்ந்த பேராசியரும் தனது களவியல் உரையில் இந்நூலை ஆண்டிருக்கிறார். இக்காலத்திலே தான் அய்ம்பெருங்காப்பியங்கள் என்ற வழக்குத் தோன்றியிருக்க வேண்டும். 11ஆம் நூற்றாண்டில் இக்காப்பியம் அறிஞர்களுக்குள்ளே பெருவழக்காய் இருந்தது என்பதனை யாப்பருங்கல விருத்தியுரையாலும் தொல்காப்பிய உரையாலும் அறியலாம். இதற்கு முன்பாக 10ஆம் நூற்றாண்டளவில் எழுந்த களவியலுரையிலும் இந்நூலை மேற்கோள் காட்டியுள்ளார்கள். தமிழ் ஓர் இனிமையான மொழி என்பதனை பாரதியாரின் கவிதைகளைப் படித்த பின்னரே பலர் அறிந்து கொண்டார்கள். அவருக்கு முந்திய காலத்தில் புலவர்கள் எழுதிய பாடல்கள் பெரும்பாலும் கடினமான தமிழில் எழுதப்பட்டிருந்தன. வட மொழிக் கலப்பும் நிறைந்து காணப்பட்டன. பாரதியாருக்குப் பிறகு தமிழின் இனிமையைக் கவிதையில் வடித்தவர்களில் பாரதிதாசன், கண்ணதாசன் சிறப்பிடம் வகிக்கிறார்கள். உரைநடையில் தமிழுக்கு இனிமை சேர்த்தவர்களில் அறிஞர் அண்ணாவும் கலைஞர் கருணாநிதியும் குறிப்பிடத்தக்கவர்கள். பண்டிதர்களிடம் அகப்பட்டு இருந்த தமிழை பாமர மக்களிடம் தவழவிட்ட பெருமை இவர்களையே சாரும்.

சிலப்பதிகாரத்தில் காணப்படும் கானல்வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை ஆகிய காதைகளில் வரும் இசைப்பாடல்கள் பன்னிரு ஆழ்வார்களது பக்திப்பாடல்களுக்கு அடிகோலின. சிலப்பதிகாரத்தின் செல்வாக்கை அவர்களது பக்திப் பாடல்களில் காணலாம். நல்ல தமிழ் எழுத விரும்புவோர் கட்டாயம் நாலாயிர திவ்ய பிரபந்தத்தை ஒருமுறையேனும் படிக்க வேண்டும். உரையாசிரியர்களது உதவியின்றியே பல பாடல்களைப் படித்து பொருள் தெரிந்து கொள்ளலாம்.

பன்னிரு ஆழ்வார்களை வரிசைப்படுத்துவதில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் காணப்படும் வரிசையில் அவர்களைப் பற்றியும் அவர்களது பாடல்கள் பற்றியும் எழுதலாம் என நினைக்கிறேன். ஏற்கனவே ஆழ்வார்கள் பற்றியும் அவர்களது பாடல்கள் சிலவற்றைப் பற்றியும் எழுதியுள்ளேன்.

முதலில் பெரியாழ்வாரைப் பற்றிப் பார்ப்போம். திருவில்லிப்புத்தூர் என்னும் பாண்டிய நாட்டில் முகந்த பட்டர் என்னும் சோழிய பிராமணர் இருந்தார். அவர் பதுமவல்லி என்னும் பெண்ணை மணந்தார். இவர்களுக்கு ஒர் ஆண்மகவு பிறந்தது. அந்தக் குழந்தைக்கு தாய் தந்தையர் இட்ட பெயர் விட்டு சித்தன். பின்னாளில் பெரியாழ்வார் என்றும் பட்டர் பிரான் என்றும் போற்றி புகழப்பட்டார். இவரது ஆண்டுக் காலம் கிபி ஒன்பதாம் நூற்றாண்டு. இவர் நன்கு படித்து, திருமாலுக்குத் தொண்டு செய்யும் எண்ணம் கொண்டு பலவகைப்பட்ட மலர்ச்செடிகளை வைத்து, அம்மலர்களால் அழகிய மாலைகள் தொடுத்து திருமாலிற்கு சாற்றிப் பெருமகிழ்ச்சி அடைந்தார். இவர் கண்ணனது திருஅவதாரச் செயல்களை போற்றி 44 திருமொழிகளாகப் பாடினார். இவற்றின் மொத்தப் பாடல்கள் 461 ஆகும். திருப்பல்லாண்டு பாடல்கள் 12 ஆகும். மொத்தம் சேர்த்து 473 பாசுரங்கள். இவருடைய பாசுரங்கள் பெரியாழ்வார் திருமொழி என்று அழைக்கப்பட்டு நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் முதலில் வைக்கப்பட்டுள்ளது.

பெரியாழ்வார் வாழ்ந்த காலத்திற்கு முன்னமேயே பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் என்று பலர் இருந்தும் அவரின் பாடல்களை முதலாவதாக வைத்திருக்கிறார்கள். பெரியாழ்வார் பாடல்களில் தாய்மை நிறைந்த பக்தியைக் காணலாம்.

திருப்பல்லாண்டு 12 பாடல்களால் ஆனது. நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் முதலாயிரத்தில் 1 தொடக்கம் 12 வரையுள்ள பாடல்கள் திருப்பல்லாண்டு பாடல்கள் ஆகும். பெரியாழ்வார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு காப்பு இப்படித் தொடங்குகிறது.

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா!* உன்
சேவடி செவ்வித்திருக்காப்பு
(1)

பல்லாண்டு பல்லாண்டு பல ஆயிரம் ஆண்டுகள் பல கோடி நூறாயிரம் ஆண்டுகள் எல்லாம் கால எல்லையற்ற, எப்பொழுதும் அருள் பாலித்துக்கொண்டிருக்கின்ற மணிவண்ணா, மல்லாண்ட தின்தோள் மணிவண்ணா, நீ அன்று கிருஷ்ணவதாரத்திலே உனது மாமன் கம்சனின் சதியாம் மல்லர்களை திண்மையான தோளுடைய நீ வெற்றிக் கண்டாய். உன் சேவடி செவ்வி திருக்காப்பு, உன்னுடைய சிவந்த கமல மலர் போன்ற பாதங்களுக்கு என்றென்றும் பல்லாயிரம் ஆண்டுகள் திருக்காப்பு தொடர்வதாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முறை குழந்தை கண்ணன், வெண்ணையைத் திருடி உண்டுவிட்டான். அதை அறிந்த யசோதை ஏன் வெண்ணையைத் திருடி உண்டாய்? என்று வினவியதற்கு, கண்ணனோ இல்லை என்று பொய்யுரைத்தான். உடனே, யசோதா கண்ணனின் வாயைத் திறக்கச் சொன்ன பொழுது, கண்ணனும் தன் திருவாய்த் திறந்து காண்பித்தார். வாயினுள் யசோதை, வெண்ணையைக் காணவில்லை! அண்டசராசரமும் அவர் கண்முன், கண்ணனின் வாயினுள் விரிந்தது. இவ்வாறு பேரண்டம் அத்தனையும், தன் வாயினுள் வைத்து இருக்கும் கண்ணனுக்கு இவர்கள் எல்லாம் எம்மாத்திரம். அவன் தன் திண்மையான தோள் வலிமையினால் வீரர்களை எளிதில் வெற்றிக் கொண்டான், பகவான் கண்ணன். அந்த கார் முகில் வண்ணனை, நீல மணி  உடலானை தோள் வலிமையினால் மல்யுத்த வீரர்களை வெற்றிக் கொண்ட நீல மணிவண்ணா!

அடியோ மோடும் நின்னோடும் பிரிவின்றி யாயிரம் பல்லாண்டு
வடிவாய் நின்வல மார்பினில் வாழ்கின்ற மங்கையும்
பல்லாண்டு
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர் புக்கு முழங்குமப் பாஞ்சசன்னியமும் பல்லாண்டே. (2)

உனது அடியார்களாகிய நாங்கள் உன்னுடனும் நீ எங்களுடனும் பிரிவென்பதே இல்லாமல் இருக்க உனக்கு நாங்கள் ஆயிரம் பல்லாண்டு கூறினோம். அழகான உன்னுடைய மலர் போன்ற வலமார்பினிலே நித்தம் வீற்றிருக்கும் தாயாரும் பல்லாண்டே. வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு, அழகிய ஒளிவெள்ளமான உன் வலக்கையிலே வீற்றிருக்கும் சுடராழியும் பல்லாண்டே.. அன்று பாரதப்போரிலே போரினை தொடங்க எடுத்துக்கொண்ட பாஞ்ச சன்னிய (சங்கு) மும் பல்லாண்டே. இங்கே எல்லாவற்றையும் பல்லாண்டே என்று கூறுவதன் பொருள், பல்லாண்டு என்பது போற்றியாகவும் பல ஆயிரம் ஆண்டுகள் இருந்து எங்களுக்கு அருள் பாலிக்கவேண்டும் என்றும் அதற்காக நீ பல்லாண்டு இரும் என்று கூறுவதாகவும் எடுத்துக்கொள்ளலாம். (வளரும்)●

## வால் எலும்பு வலி..

வைத்து அதன் மேல் உட்கார வேண்டும். உட்காரும்போதும் திடீரென அடிபட உட்காராது, மெதுவாக கைபிடிகளைப் பிடித்து பாரம் அடியில் தாக்காதவாறு மென்மையாக உட்கார வேண்டும்.

நடுப்பகுதியில் குழி வைத்து அப்பகுதி அண்டாதவாறு உட்காரக் கூடிய கார் டியூப் போன்ற இருக்கைகள் கிடைக்கின்றன. முதலில் கூறிய அந்தக் குட்டித் தேவதை அத்தகைய ஒரு இருக்கையைப் பயன்படுத்தி நீண்டதூரம் சுற்றுப் பிரயாணம் செய்ய முடிந்திருந்தது.

எலும்பு உள்ள இடத்தில் அண்டாதவாறு பள்ளம் விடப்பட்ட குஷன்கள் (Coccyx (tailbone) cushions) விற்பனைக்கு கிடைக்கிறதாக அறிகிறேன்.

இடுப்பு எலும்புப் பகுதியில் உள்ள தசைகளைத் தளரச் செய்யும் பயிற்சிகள் (pelvic floor relaxation) கொடுப்பது உதவும். ஆழமாக மூச்சு எடுத்து மலவாயில் சலவாயில் ஆகியவற்றை அண்டியுள்ள தசைகளை தளரச் செய்வது இதுவாகும். பொதுவாக சிறுநீர் கழியும் போது இவ்வாறு தசைகள் தளர்வதுண்டு.

பொதுவாக மனதை அலட்டிக் கொள்ளாது மேற்கூறிய வாழ்க்கை முறைகளையும் பயிற்சிகளையும் செய்ய நோய் குணமாகும். இப்பெண்ணிற்கு அவற்றால் வலி தணியாததால் ஊசி ஏற்றிக் குணமாக்க வேண்டியதாயிற்று.●

## 'வானொலி ஊடகவியல்' நூல் வெளியீடு

எழுத்தாளரும் கல்வியியலாளருமான 'பெரும்புலவர்' மொகமட் ஹன்சீர் எழுதிய 'வானொலி ஊடகவியல்' நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 23ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3:30 மணிக்கு ஸ்காபரோ சிவிக் சென்டர் கவுன்சில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. எழுத்துலக நண்பர்கள் ஆர்வலர்கள் அனைவரையும் விழாவிற்கு வருகை தருமாறு நூலாசிரியர் வேண்டுகின்றார். மேலதிக விபரங்களுக்கு நூலாசிரியருடன் 647 522 1357 இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும்.

## தமிழ் இலக்கியத் தோட்ட வருடாந்த விருது விழா

கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் வருடாந்த விருது வழங்கும் விழா இந்த மாதம் 28ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஆறு மணி முதல் ஸ்காபரோ றடிஷன் ஹோட்டலில் நடைபெறவுள்ளது. வாழ்நாள் சாதனை இயல் விருதை தியடோர் பாஸ்கரனும், சிறப்பு விருதை பிரென்டா பெக்கும் விழாவில் பெறுகின்றனர். வழமையான மற்றைய விருதுகளும் வழங்கப்படவுள்ளது. அழைக்கப்படுபவர்கள் மட்டுமே இவ்விழாவில் கலந்துகொள்ள முடியும்.

Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer

Scotiabank® You're richer than you think.®

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

# உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்





- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

**HEAVEN CARES**

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

Chapel Ridge

FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS

8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng

Funeral Counsellor

**416-431-3600** Ext:1

Call: **Christeen Seevaratnam**

Funeral Counsellor

**416-431-3600** Ext:2







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..

On high, with your thoughts



PRO MAR Ltd.

O Corporate Awards
O Promotional Products
O Laser Engraving
O Pad Printing
O Silk Screening

*Vivek Subra*
Director
B:416- 291 2344
D:416- 898 4846
promarawards@gmail.com

www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

Put your logo on anything!


One stop for all your promotional needs.



PRO MAR Ltd.
416 898 4846
vivekpromar@gmail.com

வாங்குவதும் விற்பதும் சுலபமே ஆனால்..
தெளிவான தெரிவே உங்கள் வெற்றிப்படி.

***Why think so long...?***





- Free market evaluation
- Professional advice on selling your home for more
- State of the art marketing idea
- Flexible commission
- Friendly service producing excellent results
- List through me to have your property sold in a few days


Mortgages & loans arrangements


Vivek Subramaniam
Sales Representative
416-898 4846


**Homelife/Future**
Realty inc. Brokerage
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated











# கோவில் மாலைகள் மற்றும் பூஜை பொருட்கள்

**5633 Finch Ave East, Unit # 6, Scarborough, ON M1B 5K9**
**(416) 288-1419**

சொரி பூக்கள், சரம் மற்றும் பூஜைக்கு தேவைப்படும் இலை வகைகள்

| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 2.00/ M | அறுகம் புல் | $ 3.00/bag |
| உள்ளூர் கார்னேஷன் சரம் | $ 2.00/M | வில்வம் இலை | $ 3.00/bag |
| மல்லிகைப்பூச்சரம் | $ 5.00/M | வேப்பிலை | $ 3.00/bag |
| கார்னேஷன் மலர்கள் | $ 0.20 each | Marukhalundu /Maru | $ 3.00 /bag |
| மல்லிகை மலர்கள் | $ 5.00/bag | மாவிலை | 10 per $ 1.00 |
| சம்பாகினி மலர்கள் | $ 3.00 /bag | வெற்றிலை | 10 per $ 1.00 |
| அரலி மலர்கள் | $ 3.00 /bag | வாழை இலை | $ 1.00 each |
| தாமரை மலர்கள் | $ 1.00 each | துளசி இலை | $ 3.00/bag |

Fancy Florist




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)



# நிழல் கனிந்த கனியே!

ஈழவள நாட்டிலே பல மெய்ஞ்ஞானிகள் அவதாரம் செய்து, மண்ணின் பெருமையைத் துலங்க வைத்தனர். அவர்களிலொருவர் நாவலர் பெருமான். சைவமும் தமிழும் அவர் சிந்தனை வளத்தால் உயர்ந்தன. ஒரு சைவப் பரம்பரையும், தமிழ்ப் பரம்பரையும் அவரின் சொல் வண்ணத்தால் உயர்ந்தன. இவர் காலத்திலேதான் சைவம் தழைத்தது. இவர் காலத்திலே தென்தமிழ் நாட்டிலே வாழ்ந்தவர் வள்ளலார் என அழைக்கப்பட்ட இராமலிங்க சுவாமிகள். அவரின் அருள் செயல்களான திருவருட்பாக்களை அருட்பாவெனப் போற்றிப் புகழ்ந்தனர். அப் பாமாலைகளைத் தொகுத்து ஆறுதிருமுறைகளாக வெளியிட்டனர். மூவர் தமிழெனப் போற்றப்பட்ட தேவாரங்கள் திருமுறையெனப் போற்றப்பட்டவேளை அருட்பாவைத் திருமுறையாக வகுத்தமை ஒவ்வாது போனதைப் பாவலரான நாவலர் பெருந்தகை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனாற் தேவாரத்துக்குப் பின்னடைவு உண்டாகுமென வாதாடி வெற்றி பெற்றமையாற்றான் தேவாரத் திருமுறை தழைத்துப் பொலிந்தது. எனினும் அருட்பாக்களைத் தமிழகம் போற்றியது. சுமார் ஆறாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்கள் நூலுருவம் பெற்று மக்களால் நன்கு மதிக்கப்பட்டன. அவைகளின் கனிவும் இனிமையும் செழுமையும் கொளுமையும் சொல்லுந்தரமன்று. மாதிரிக்குச் சில அருட்பாக்களை அளந்து பார்ப்போம்.

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்
வகைகிடைத்த குளிர்தருவே தருநிழலே
நிழல்கனி ந்தகனியே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மெனகாற்றில் விளைசுகமே
சுகத்திலுறும் பயனே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்
தண்ணீரே உகந்த தண்ணீரிடை மலர்ந்த
சுகந்த மனமலரே
ஆடையிலே எனைமணந்த மணவாளா
பொதுவில் ஆடுகின்ற அரனே
என்அலங்கல் அணிந்தருளே

திரு அருட்பா

இப் பா வடிவத்தின் முதல் மூன்று வரிகளின் அமைப்பை ஒருமுறை ஓர்ந்து பார்ப்பாம்.

வெயிலின் அருமை நிழலிலேதான் தெரியும் என்பர். அதுவும் கோடைகால வெயில் எப்படி இருக்கும், அதை அனுபவித்தாற்றான் தெரியும். தரு என்றால் மரம். இது தந்த நீழலே அடுத்து வருகிறது. ஏலவே சொன்னோமே. வெயில் அருமை நிழலிற் தெரியும் என சட்டச்சடவென்று அடிக்கும் மரச் சலசலப்பும் அதை அனுபவிக்கும் அனுபவமும் ஒரு தனி ரம்மியமே. இதிலே வரும் மரம், மரம் தரும் நிழல், அதன் அனுபவிப்பு முதல் வரியிலே எடுத்துப் பேசப்பட்டிருக்கிறது. இக்கட்டத்திலேதான் நிழல் கனியாக மாறிவிட்டது. அவ்வளவு குளுகுளுப்பு.

காய் முற்றிப் பழுத்தாற் தின்தீம்கனியாமென அவ்வை பாடினார். இந்தப் பாணியிலேதான் முருகப் பெருமான் சுட்ட பழம் வேண்டுமா, சுடாத பழம் வேண்டுமா எனக் கேட்டான். பதில் பாட்டாகவே வெளியானது. சுட்ட பழம் நன்கு அனிந்த கனிந்த பழம். அனிந்த பழம் என்ற பிரயோகத்தை ஆழ்வார்களும் எடுத்து ஆண்டுள்ளனர். அதுவே அனிந்த கனியென்ற பாவனை, தகவல் வாசகர்களே அனிந்த கனியெனிற் பழுத்த பழம். ஆனால் இப்பாடலிலே நிழலே கனியாகப் பேசப்படுகிறது. இனிப் பாடல் அடியைப் பாருங்கள். அவ்வளவு குளுகுளுப்பான காற்று அஃது. தென்றல் காற்றாயின் அதன் செவ்வி சொல்லவும்படுமோ!

நிழலின் பெருமையைக் கனியாகக் காட்டிக் கண்டாக ருசித்த வள்ளற் பெருமான் மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே, மென்காற்றில் விளைசுகமேயெனத் தமிழ் செய்கிறாம் (தமிழ் - அன்பு) காற்றோ மென்மையானது அது பூங்காற்றாய்ச் சிலுசிலுக்கிறது. சுகந்த மணமலரெல்லாம் கமகமவென மணக்கின்றனவே. என்ன மணம் முல்லையோ, மல்லிகையோ, ரோஜாவோ, பவளமல்லிகையோ, நீலோற்பலமோ - வள்ளலாரின் வள்ளற் தன்மை இப்பாடலிலே கைமாறு கருதாத இன்னிசை முழக்கமாய் அமைகிறது அன்றோ! அந்தச் சுகந்த மணமல்லவோ கமகமவென வாசனை வீசுகிறது. எனவே நிழல் அளித்த வாசனை கனியாக உருவகம் பெறுகிறது அன்றோ. காய்கனியாவது சகசம். அது கனியாகப் பேசப்படுகிறது வள்ளலாரின் வாக்கிலே.

எவ்வளவு செவ்வி அக்காற்றுக்கு. நிழலுக்கு - இங்கே நிழல் பழமாக மாறியதும் தமிழ் தந்த மேன்மையே - அடுத்துவரும் அடியைப் பார்ப்போம். "மேடையிலே வீசுகின்ற மென்காற்று. மென்காற்று உடலைத் தொட்டுச் செல்லும் பாவம் பாவலனின் கற்பனை வளமே. இங்கேயும் மேடையிலே வீசுகின்ற மென்காற்று - அதன் அனுபவம். அந்த அனுபவிப்பு சுவைஞனை ஈர்த்துப் பெற்ற ரசனையே. சுகத்தில் உறும்பயன். இப்பா வரிசையிலே வரும் ஆடையிலே எனை மணந்த மணவாளா என வள்ளலார் பேசுவது எதை நேயர்களே! உங்கள் கற்பனைக் குதிரைகளைத் தட்டியெழுப்பி ஓடவிடுங்கள் புரியும். நடராசன் ஆனந்தத் தாண்டவம் ஆடுகின்றான்.

ஆடையிலே எனை மணந்த மணவாளா - பொதுவில் ஆடுகின்ற அரனே! என் அலங்கல் அணிந்தருளேயென்ற பாவடி பற்றி இனிச் சிந்திப்போம். தில்லையம்பலத்திலே ஆனந்த நடராஜன் ஆடுகின்றான். ஆடும் இடமன்று. இதைப் பொதுமன்று எனவுஞ் சொல்வர். உலகம் பலவிதம் என்பர். இதை உலகம் அம்பலிதம் என்றும் கூறுவர். அவன் ஆட அவனி நடைபெறுகிறது என இன்றோர் பொருளுமுண்டு. அலங்கல் மாலை - இது பூமாலையாயும் வரலாம், பாமாலையாகவும் அமையலாம். தீர்த்தக்கரையிலே சிற்றாடை கட்டி இளம்பெண்ணொருத்தி ஆடுகிறாள். வயது பதினாறிருக்கும் இளவயது மங்கையென பாரதியும் பாட்டிசைத்தான். ஆடையிலே எனைந்த மணவாளா என்பது கூத்தப் பெருமானையும் குறிக்கும். கன்மை பெண்ணைக் குறிக்கும். வயசு பதினாறிருக்கும் இளவயது மங்கை கட்டிய பாவாடையும் தாவணியும் அவளையொரு சித்திரைப் பாவையாய் ஆக்கிவிட்டது. இதற்கு இரு பொருள்கள் உள.


(32ஆம் பக்கம் வருக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்தமான ஒரு வீடு
# உங்கள் வாழ்க்கையின்
# மிகப்பெரியதோர் முதலீடு

# வீடு வாங்க விற்க



## ஈசன் குலசேகரம்
Sales Representative

**416 835 1700**

info@esanhomes.com

- வீடுகள்
- தொடர்மாடி வீடுகள்
- வியாபார நிலையங்கள்
- காணி முதலீடுகள்
- வாங்குதல் - விற்றல் மற்றும்
- வாடகைக்கு கொடுக்கவும் - பெறுவதற்கும்

RE/MAX

RE/MAX Vision Realty Inc., Brokerage

## விக்கி வேலாயுதன்
Sales Representative

**416 457 7162**

vvelauthan@yahoo.com



அனைத்துக்குமான ஆலோசனைகளுக்கும்
நம்பிக்கையான சேவைகளுக்கும் நாடுங்கள்..

**Office: 416-321-2228 Fax: 416-321-0002**

www.esanhomes.com

**2210 Markham Road # 1 , Toronto, ON M1B5V6**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். காந்தி

# வெள்ளிப் பணம்

86

வெள்ளிப் பணத் தொடரில், இம்முறை எல்லோருக்கும் நன்கு தெரிந்த Tim Horton என்னும் கோப்பிக் கடையின் வளர்ச்சியும் அதன் வரலாறும் பற்றிய தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ளும் ஒரு கட்டுரையாக அமைகிறது.

இந்த நிறுவனம் 1964ஆம் ஆண்டு ஒன்ராறியோ மாகாணத்தில் உள்ள ஹமில்ரன் என்னும் இடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதனை ஆரம்பித்தவர்கள் Tim Horton என்பவரும், Ron Joyce என்பவரும் ஆவார்கள். ஆரம்பத்தில் இது கோப்பியையும், டோனட் (Donut) என்னும் சிற்றுண்டியையும் விற்பனைசெய்துவந்தது. காலப்போக்கில் இது பல்வேறுவகைப்பட்ட உணவுப் பதார்த்தங்களை அறிமுகப்படுத்தி வந்திருக்கிறது. இன்று இது ஏறத்தாழ 35 வகைக்கும் மேற்பட்ட உணவு வகைகளை வாடிக்கையாளருக்கு வழங்கும் நிறுவனமாக வளர்ச்சி கண்டுள்ளது.

2013 யூன் மாத புள்ளிவிபரங்களின்படி, இது 4,304 கிளைகளைக் கொண்ட உணவகமாக மாறியுள்ளது. இதில் 3,468 கனடாவிலும், 807 கிளைகள் ஐக்கியஅரபுராச்சிய (GULF Corporation Council) நாடுகளிலும் இயங்கி வருவதாக புள்ளிவிபரம் கூறுகிறது. கனடாவில் முக்கியமாக, பல நிறுவனங்கள் அமைந்திருக்கும் அங்காடிகள், பெருந்தெருக்கள் வழியாக வெளிவரும் பாதைகள் (High way outlets), பல்கலைக்கழகங்கள், வைத்தியசாலைகள், எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் எனப் பல்வேறு இடங்களில் அமைந்திருக்கிறது. தெரிவு செய்யப்பட்டசில இடங்களில் இது 24 மணிநேரசேவையையும் செய்துவருகின்றது.

இந்த நிறுவனத்தின் பங்குகள் முதன் முதலாக 2006ஆம் ஆண்டு பங்குனி மாதம் ரொறன்ரோ பங்குச் சந்தையிலும், நியுயோர்க் பங்குச்சந்தையிலும் விற்பனைக்கு அறிமுகமாகியது. இதனை ஆங்கிலத்தில் IPO (Initial Public Offering) என அழைப்பர். 2006ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் முதன் முதலாக இந்த நிறுவனம் தனது பங்குகளை பொதுமக்களுக்கு விற்பனை செய்யத் தொடங்கி, Public Company ஆக புதிய உருமாற்றத்தினைப் பெற்றது.

புரட்டாதி மாதம் 29ஆந் திகதி முதல்நாள் அன்று இதன் ஒருபங்கின் (Share) விலை 29 டாலர் 27 சதமாகக் காணப்பட்டு, அன்றுபங்குச் சந்தைமுடிவடையும்போது அதன் விலை 2 சதம் குறைவாக 29.25 சதமாகக் காணப்பட்டது. இன்று (May 13 2014) ரொறன்ரோ பங்குச்சந்தை ஆரம்பிக்கும்போது 59 டாலர் 83 சதமாக இருந்திருக்கின்றது. இந்த இடைப்பட்டநேரத்தில் இது ஆகக்கூடியவிலையாக 59.89 சதத்துக்கு விலைபோய் இருக்கின்றது. அதேபோல, ஆகக் குறைந்தவிலையாக 59.57 சதத்துக்கும் கீழ் இறங்கிவந்திருக்கின்றது.

இந்த நிறுவனம் 2013இல், தனது பங்குதாரர்களுக்குப் பங்கு லாபமாக ஒரு பங்கிற்கு 1 டாலர் 04 சதம் வழங்கியுள்ளது. 2014ஆம் ஆண்டு முதல் காலாண்டுக்கான இலாபமாக 0.32 சதங்கள் வழங்கியுள்ளது. இதனுடைய 2013ஆம் ஆண்டுக்கான வருமானம் 3.225 பில்லியன் கனடிய டாலர்களாகும். அமெரிக்காவில் எதிர்வரும் ஆண்டுகளில் கூடிய கிளைகளை அமைப்பதற்கான முயற்சியில் Tim Horton ஈடுபடும் என எதிர்பார்க்கப்படுகின்றபோதும்,அங்கு இதற்குப் பெரும் போட்டியாக இருப்பது Dunkin Donuts என்னும் கோப்பிக்கடையாகும். அது தற்பொழுது அமெரிக்கா முழுவதும் 7,000 கிளைகளைக் கொண்ட நிறுவனமாக இருக்கின்றது.

கனடாவிலும் இதற்குப் போட்டியாக இருக்கும் நிறுவனங்களாக McDonalds, Starbucks மாகக் காணப்படுகின்றன. எனினும் 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2018ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் மேலும் 500 கிளைகளை நிறுவுவது என்றும், அமெரிக்காவில் 300 கிளைகளை அமைப்பதென்றும் Tim Horton நிறுவனம் தீர்மானித்திருப்பதாகச் சொல்லப்படுகின்றது. இதுமாத்திரமன்றி, அது வழங்கும் சேவைகள், கோப்பியின் தரம், சுவை என்பவற்றை உயர்த்துவது மற்றும் வாடிக்கையாளர்கள் வரிசையில் காத்திருக்கும் நேரத்தினைக் குறைப்பது அல்லது இல்லாமல் செய்வது போன்ற விடயங்களும் கவனத்தில் கொள்ளப்படுமெனச் சொல்லப்படுகின்றது.●

R & S
AUTO SALES
Top Quality Used Car Dealer


வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

36 வருட அனுபவம்



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற
Radha

R & S Auto Sales Inc.
Radha Motor Inc.
3030 Markham Road
Scarborough, ON
416-412-3838
416-836-5825



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

HERITAGE
Education Funds

**RESP**
**SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

EDUCATION IS
A GREAT GIFT FOR
YOUR FUTURE GENERATIONS

உங்கள் பிள்ளைகளின்
கல்விக்கான சேமிப்பு உங்கள்
எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com

## இலங்கையின் மீது பொருளாதாரத் தடை கோரி ஒட்டாவாவில் சந்திப்பு

இலங்கை அரசாங்கத்தின் மீது கனடிய அரசு பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்பதை வலியுறுத்தும் வகையிலான சில தொடர் சந்திப்புகளும் பேச்சுவார்த்தைகளும் கடந்த மாத இறுதி வாரத்தில் ஒட்டாவாவில் இடம்பெற்றது. கனடியத் தமிழர் தேசிய அவையின் (NCCT) குழுவொன்று மே மாதம் 26ம் திகதியிலிருந்து 30ம் திகதிவரை அங்கு தங்கியிருந்து இச்சந்திப்புகளை நடத்தியது. இக்குழுவில் கணிசமான இளையோர் பிரதிநிதிகளும் பங்குபற்றினர்.

## இலங்கையில் விபத்தில் ஐந்து வருடங்களில் 2728 மாணவர் பலி

இலங்கையில் கடந்த ஐந்து வருடங்களில் வாகன விபத்துகளால் 2728 மாணர்கள் கொல்லப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வ - மாகக் காவற்றுறை அறிவித்துள்ளது. இந்த விபத்துகளால் 8524 மாணவர்கள் காயமடைந்து அங்கவீனர்களாகியுள்ளனர்.

## சாரதியின்றி ஓடும் கூகிள் கார்கள்

சாரதிகள் இல்லாது ஓடும் கார்களை உருவாக்கும் ஆரம்ப முயற்சியில் கூகிள் நிறுவனம் வெற்றி கண்டுள்ளது. சாரதிகள் செய்யும் தவறுகளை நீக்கி, காரோட்டும் வேலையை மேலும் பாதுகாப்பானதாக்கு-வதே இதன் நோக்கம். இந்த நவீன கார்களுக்கு ஸ்டியரிங் மற்றும் பெடல்கள் இருக்காது. ஓட்ட ஆரம்பிக்கும் பொத்தான்கள் மட்டுமே இருக்கும்.

## உடல் பருமனாகும் பிரச்சனை அதிகரிப்பு

உலகளாவிய ரீதியில் மனிதர்களின் உடல் பருமனாவதைத் தடுக்கும் முயற்சி எதுவும் பலனளிக்காததால் இது பெரும் பிரச்சனையாக மாறி வருகின்றது. உலக மக்கள் தொகையில் முப்பது வீதமானவர்கள் உடல் பருமனுள்ளவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. ஆண்-பெண், பெரியவர்-சிறியவர் என்ற வேறுபாடின்றி அனைவரையும் உடல் பருமன் அச்சுறுத்தி வருகின்றது. அமெரிக்காவில் நாற்பது வீதமானவர்கள் உடல் பருமனுள்ளவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**The Children's Education Trust of Canada**
offered to the public by

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற
சிவா
கணபதிப்பிள்ளை
அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!

Siva Kanapathypillai
Dealing Representative

**418 899 6044**

email
s.kanapathypillai@cefi.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Will An Unsteady State of Governance Bring A Lasting Peace?



Ayathuray Rajasingam

The message of Bhagavad Gita extends to the area of promoting good governance and sustainable development. Even Buddhism is indebted to the teachings of the Bhagavad Gita. Gita stresses the concept of duty and its significance for good leadership. Duty needs to be done without attachment and without any discriminations whatsoever and for those who do their duty without attachment will attain the supreme goal. It is the steady state of governance which will promote a lasting peace in any country.

Good governance denotes the ability to manage one's anger which should not be allowed to gain control over an individual. According to Gita, complete delusion arises from anger and from delusion bewilderment of memory. When memory is bewildered, intelligence will be lost and when intelligence is lost, one falls down. The control of anger is a vital aspect of human relations. Prince Duryodhana was shown in Maha Bharath as emotionally blackmailing Karna to engage in unrighteousness and followed an unsteady state of governance. This is what is happening in Sri Lanka today.

Sri Lanka political leaders always want to be in the forefront whenever there is a conference on the subject of the teachings of Bhagavad Gita, but when it comes to practice, they completely ignore its teachings and focus on misleading the public on various pretexts, especially engaged in emotional blackmailing which leads to unsteady state of governance. Political leaders in countries where pluralism is practiced have yet to learn a lot from Federal countries like Canada. In Federal countries there are different decision-makers with different constituencies and democratic claims of equal strength with a steady state of governance. Should there be any conflicts, Judicial Review is seen as the best practical solution for settling disputes about Federalism. Political leaders in those countries are discouraged to engage in emotional blackmailing of the minority communities. In Federal countries democracy cannot appear to be a tyranny of the majority community. This is why Federalism is seen as a pathway to a strong democracy and for a lasting peace.

The messages of Bhagavad Gita are in compliance with the unique features of Federalism. The unique feature of Federalism is that it offers representation to different populations which have different aspirations and follow different cultures. But it appears that the government under President Rajapaksa has been overlooking these differences and adopt policies which cater to the majority for which the BBS is still been utilized in an uncultured manner, which is evident when he is unable to conquer his egoistic attitude and unable to use his intelligence. President Rajapaksa failed to realize that Provincial government are in a better position to understand their problems and offer unique solutions for them. This would have been the out come of the 13th Amendment had it been implemented in its true perspective. This does not in any way amount to separation.

It is also painful to watch that the Central Government failed to realize that Federalism has the force of promoting inclusive development to Provinces and assuring proportional and fair representation for both the Tamil and Muslim communities in future governments and other decision-making organs of the country. In the Northern Province in Sri Lanka some unscrupulous ruling politicians ignore the aspirations of the people in the Northern Province and appropriate their resources in an undemocratic manner. This is where tyranny of the majority community is undemocratically is forced upon the minority Tamils. Here is a case when the Chief Minister desired to fulfill the needs of the people, his powers had been suspended through the Judiciary which have been squeezed because of the enormous powers of the Executive. This is where the Rajapaksa's unsteady policy is exposed demonstrating that he is not interested in finding a lasting peace, but to keep the country under tension which cannot go on forever. Had the powers of the Chief Minister been not suspended, there would have been due consideration to local needs, tastes and opinion while formulating policies.

Moreover, President Rajapaksa has failed to realize the message of the 13th Amendment that giving more powers to the Provinces, gives more control over their own affairs in their Provinces and protects them against the predatory politics of the Centre. Every Province has political, social and economic problems peculiar to the Province itself. It is the Provincial government representatives who are in a better position to understand these problems and offer unique solutions for them. As such there is no reason for the Central Government to delay the implementation of the 13th Amendment. If this is implemented, there will be unity among the Provinces when the Provinces have an annual General Conference among the Chief Ministers. Even the Provincial administrative machineries can have a conference and discuss ways and means to develop their respective Provinces.

The 13th Amendment will provide the oppressed minority Tamils a legal and political structure to preserve their own culture and identity and will prevent the dismemberment of a country. This is the way to establish a confident building measure among the people. One ponders whether President Rajapaksa is adapting a policy of divide and rule with the view to defeat the purpose of the 13th Amendment and shatter the relationship of trust of the Tamils and even of the oppressed Sinhalese.

The Sinhalese are brainwashed into thinking that only President Rajapaksa can save and protect them and Buddhism. They are informed that any support given to the opposition by the West will end up in surrendering their sovereignty which is absolutely false and without any foundation. To achieve this purpose, Rajapaksa's regime has adopted a policy of divide and rule among the communities and created a fear psychosis among the people through the creation of monster group like the BBS. But it is unfortunate that many Sinhalese are unaware that Rajapaksa is following a malignant economic policy, the result of which has seen earning foreign exchanges through Middle-East employment, where Sinhalese and Muslim girls are treated as slaves and sometimes executed in Kangaroo style without a fair trial. The execution of Rizana was a case in point. Sri Lankan ruling politicians have completely forgotten that mental instability is a step that leads to unsteady state of governance. Even Lord Buddha may be worried over such uncultured way of emotionally blackmailing the ethnic communities through the BBS. It is time for Sri Lankan politicians to realize that that service to human without any discriminations whatsoever is service to God.

When corrupt politicians enjoy power positions, people have lack of knowledge of their cruelty and absurdity. The manner of appointing the Parliamentary Select Committee and their behavior in relation to the impeachment of the Chief Justice Dr.(Mrs) Shirani Bandaranayake is a clear evidence that corrupt politicians took all forms of obnoxious decisions and made all manner of stupendous policies and made democracy a mockery.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •
Scholarship Plan [RESP]
Any Referral Service
JRB Universal Inc.
Almost All Services Available
647 289 6164

R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.
• Credit Counseling • Accounting & Tax Services •

(27ஆம் பக்கத் தொடர்)

ஈழவள நாட்டிலே பல மெய்ஞ்ஞானிகள் அவதாரம் செய்து, மண்ணின் பெருமையைத் துலங்க வைத்தனர். அவர்களிலொருவர் நாவலர் பெருமான். சைவமும் தமிழும் அவர் சிந்தனை வளத்தால் உயர்ந்தன. ஒரு சைவப் பரம்பரையும், தமிழ்ப் பரம்பரையும் அவரின் சொல் வண்ணத்தால் உயர்ந்தன. இவர் காலத்திலேதான் சைவம் தழைத்தது. இவர் காலத்திலே தென்தமிழ் நாட்டிலே வாழ்ந்தவர் வள்ளலார் என அழைக்கப்பட்ட இராமலிங்க சுவாமிகள். அவரின் அருள் செயல்களான திருவருட்பாக்களை அருட்பாவெனப் போற்றிப் புகழ்ந்தனர். அப் பாமாலைகளைத் தொகுத்து ஆறுதிருமுறைகளாக வெளியிட்டனர். மூவர் தமிழெனப் போற்றப்பட்ட தேவாரங்கள் திருமுறையெனப் போற்றப்பட்டவேளை அருட்பாவைத் திருமுறையாக வகுத்தமை ஒவ்வாது போனதைப் பாவலரான நாவலர் பெருந்தகை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனாற் தேவாரத்துக்குப் பின்னடைவு உண்டாகுமென வாதாடி வெற்றி பெற்றமையாற்றான் தேவாரத் திருமுறை தழைத்துப் பொலிந்தது. எனினும் அருட்பாக்களைத் தமிழகம் போற்றியது. சுமார் ஆறாயிரத்துக்கு மேற்பட்ட பாடல்கள் நூலுருவம் பெற்று மக்களால் நன்கு மதிக்கப்பட்டன. அவைகளின் கனிவும் இனிமையும் செழுமையும் கொளுமையும் சொல்லுந்தரமன்று. மாதிரிக்குச் சில அருட்பாக்களை அளந்து பார்ப்போம்.

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்
வகைகிடைத்த ருளிர்தருவே தருநிழலே
நிழல்கனி ந்தகனியே
மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றே
மெனகாற்றில் விளைசுகமே
சுகத்திலுறும் பயனே
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்

NKS Draperies & Blinds
210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
416 321 6420


• Vertical blinds
• Venetian blinds
• Draperies
• Curtains
• Shutters
உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட
அழையுங்கள்
கேதா
தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூன் 12 ஒன்ராறியோ மாகாண சபைத் தேர்தலில் பொறுப்பான தலைமையினை உருவாக்குவோம்

ONTARIO NDP

- புதிய வேலைவாய்ப்புக்களை ஊக்குவித்து உருவாக்குவதற்கும்
- மின்சாரக் கட்டணச் சுமையைக் குறைப்பதற்கும்
- அதிகரித்துவரும் வாகனக் காப்புறுதியைக் கட்டுப்படுத்தவும்
- ஸ்காபரோவுக்கான சுரங்க ரயில் **(Subway)** உட்பட, தரமான பொதுப்போக்குவரத்தை உருவாக்கவும்

## மற்றும் பொறுப்பான அரசாங்கம் அமையவும் வாக்களிப்போம்



தனது நீண்டகாலச் சமூகப் பங்களிப்பில்,
எம்மக்களின் தேவைகளை முன்னிறுத்தி செயற்பட்டுவரும்
நீதன் வெற்றிபெற சமூகமாய் உழைத்திடுவோம்.
மக்களின் ஆதரவும் உழைப்புமே வெற்றியை உறுதிசெய்யும்.
நீங்களும் இணையுங்கள் நீதனின் வெற்றிக்காய்


VOTE
# Neethan SHAN
Scarborough-Rouge River

www.neethanshan.ca | neethanshan@ontariondp.ca | 416-287-9292

Authorized by the CFO for the Ontario NDP




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585


# FREE ! Real Estate Classes




## Successful Real Estate Office With Over 300 Salespeople




2012




2011




2010

✶No Franchise Fees ✶No Monthly Fees ✶No Desk Fees

## International Award Winning Office

### Top 5th HomeLife Office In Canada-2012

- Atractive Commission Split.
- Over 300 Salespersons.
- Daily Training, Full Services Office
- 24 Hrs Access to the Office
- Office Open 7 Days/ Week



**HOMELIFE /FUTURE REALTY INC.,** Brokerage
205 -7 Eastvale Dr., Markham, Ontario, L3S 4N7
**Bus: 905.201.9977 | 416.264.0101**

*Based on TREB data: 2012. (does not include independent or other franchisors). ©2012 HomeLife Realty Services Inc. All Rights Reserved.Each Office is Independently Owned and Operated. Not intended to solicit Agents or Brokers currently under contract.

*INDEPENDENTLY OWNED AND OPERATED*

**Selva Vettyvel**
*Broker of Record*
**Tel:416-568-4301**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org